
# திருக்கோயில்



# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
# திருக்கோயில்களில் அன்னதான திட்டம்
# அன்னதான சமையல் கூடம் திறப்பு விழா அழைப்பிதழ்





அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை- 5

நாள் : 28.10.2002 காலை 9.05 மணியளவில்



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 1000.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - மார்கழி டிசம்பர் 2002 | மணி 12 |



சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் , தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

**அருள்மிகு பழநியாண்டவர்**

## பொருளடக்கம்


இரண்டாம் திருமுறை - முனைவர் த. அமிர்தலிங்கம்

வாரியார் சொற்பொழிவில் கேட்டு மகிழ்ந்தது - திருமிகு வை. பாண்டியன் இ.ஆ.ப.

கங்கையில் கலந்த மழைத்துளி (நீதிக்கதை) - கலைமாமணி மா. இலட்சுமணன்

பாரதம் காப்பாய் கணபதியேபி.வி. சண்முகம் எம்.ஏ. பிஎட்.

அருணாசல அருள்வெள்ளம் - நெருல் இராமகிருஷ்ணன்

வெற்றிக் கடவுள் விநாயகர் - திருமதி தனலட்சுமி வெங்கடேசன் பி.ஏ.

தென்திசையில் பொங்கிய கங்கை - திருமதி மீனாட்சி கோகுலவாசன்

திருத்தணித் திருப்புகழ் திருவிழா - திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

தொண்டனுக்கு தொண்டனான தேவாதி தேவன் - திருமதி உமாசுப்பிரமணியன்

காஞ்சி குமர கோட்டம் - திருமதி ராஜேஸ்வரி விசுவநாதன்

திருக்குறளும் திருமுறைகளும் - டாக்டர் சிவப்பிரியா

திருமலை விநோதங்கள் - திருமதி இந்திராஆராமுதன்

முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் ''திருஞான சம்பந்தர்'' ஒலிநாடா மதிப்புரை - அ. நிறைமதி பி.ஏ.





உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*




# இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''பரசமய கோளரியை பாலறாவாயரை
பூம்பழனம் சூழ்ந்த
சிரபுரத்தெம் திருஞானசம்பந்தப் பெருமானைத்
தேயமெலாம்
குரவையிடத் தமிழ்வேதம்விரித்தருளும்
கௌண்டியர்தம் குலதீபத்தை
விரவிஎமை ஆளுடைய வெற்றிமழ
இளங்களிற்றை விரும்பி வாழ்வாம்''

தமிழ் வேதமாக நம் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள முதல் மூன்று திருமுறைகளில் இரண்டாம் திருமுறையில் இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறுபண்களில் அமைந்துவிளங்கும் 122 திருப்பதிகங்கள் அமைந்து விளங்குகின்றன.

நச்சரவம் தீண்டி மாண்டபட்ட வணிகன் ஒருவனை அவன் காதலியின் துயரம் தீரும் பொருட்டு திருஞானசம்பந்தர் உயிர்ப்பித்தெழச் செய்த ''சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்'' எனத் தொடங்கும் இந்தளம் பண்ணில் அமைந்த அற்புதத் திருப்பதிகம் இரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தரின் திருவருளுக்கும் பாத்திரமான இவ்வணிகன் வரலாற்றில், மகளிரைத் திருமணம் செய்ய வரதட்சணை கேட்கும் கொடிய பழக்கம் இன்றுபோல் அன்று தமிழகத்தில் நடைமுறையில் இல்லை என்ற அரிய உண்மையும் புலனாகின்றது.

இவ்வணிகன் வைப்பூர் என்னும் ஊரினன்; அவன் மாமன் தாமனுக்கு ஏழு பெண் குழந்தைகள். தன் மூத்தமகளை இவ்வணிகனுக்கே மணம் முடித்துக் கொடுப்பதாகக் கூறி இவ்வணிகனிடம் பொருள் பெற்றுக் கொண்டான் தாமன்; ஆனால் கூறிய உறுதி மொழிப்படி மூத்த மகளை இவ்வணிகனுக்குத் திருமணம் செய்து தரவில்லை.

''அதனால் என்ன? என் இரண்டாவது மகள் உனக்குத்தான். அவளைக் கட்டித் தருகிறேன். அதற்குச் சம்மதமானால் பொருள்தா'' என்று வணிகனிடம் கூறிப் பொருளை மட்டும் பெற்றுக்கொண்ட தாமன், இரண்டாவது மகளையாவது அவ்வணிகனுக்குத் திருமணம் செய்து தந்தானா? என்றால் இல்லை. இரண்டாவது மகளையும் வேறொரு இடத்தில் மணம் செய்து கொடுத்துவிட்டான்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் நம்பிக்கை மோசம் செய்தல், எக்காலத்திலும் மிகப் பலருக்குக் கைவந்த பழக்கம் போலும்! இப்படியாக மூன்றாவது மகள், நான்காவது மகள், ஐந்தாவது மகள், ஆறாவது மகள் என ஒருவரை மாற்றி ஒருவரைத் திருமணம் செய்து கொடுப்பதாக உறுதிகூறி, மீண்டும் மீண்டும் பொருளைப் பெற்று, வணிகனை ஏமாற்றியே வந்தான் தாமன்.

தன் தந்தையின் அடாத செயலைக் கண்கூடாகப் பார்த்துவந்த ஏழாவது மகள், வணிகனுக்குத் தான் மணமகளாக உடன்பட்டு, வீட்டுக்குத் தெரியாமல் அவன் உடன் போகித் திருமருகலுக்கு வந்தாள். அங்குள்ள ஒரு மடத்தில் இருவரும் இரவில் தங்கியிருந்தார்கள்.

திருமணத்திற்கு உடன்பட்டு இருவரும் ஒன்றாக ஒரு மடத்தில் இரவு நேரத்தில் தங்கியிருந்தபோதும் ஒருவரை ஒருவர் தொட்டுப் பேசவோ, பழகவோ இல்லை. திருமணத்திற்கு முன் அவ்வாறு தொட்டுப் பழகுவது அக்காலத் தமிழ்ப் பண்பாடு இல்லை.

இவ்வாறாக ஒரே மடத்தில் இரவில் தங்கியிருந்து, காலை எழுந்ததும் வேறொரு ஊருக்குச் சென்று கடிமணம் புரிய எண்ணியிருந்த வேளையில் விதியின் விளையாட்டை என்னென்பது? மடத்திற்குள் புகுந்த நச்சரவம் ஒன்று வணிகனைக் கடித்து அவன் உயிரை உண்டுவிட்டது.

காலையில் கடிமணம் புரிய இருந்த தன் காதலன் நள்ளிரவில் நச்சரவம் கடித்து மாண்டுபட, அந்நிலையிலும் அவனைத் தீண்டி அழ உரிமை இலாதவளான அவன் காதலி தனக்கேற்பட்ட துயரத்தைச் சொல்லிக் ''கோ''வெனக் கதறி அழுகிறாள். ''வாளரவு தீண்டவும் தான் தீண்டகில்லாள்'' எனத் தமிழ்ப்பண்பாட்டிற்கு இலக்கணமாக வாழ்ந்த அந்நங்கை, நடுக்கடலில் கப்பல் கவிழத் தத்தளிப்பதைப்



போல் தத்தளித்தாள் என்கின்றார் சேக்கிழார் பெருமான்.

அடியவர்கள் உய்ய அமரர்கள் உய்ய, அலை கடல்வாய் அமுதமுண்ட அமுதமே! நெடியானும் நான்முகனும் காணாத நீலவிட அரவணிந்த நிமலனே! வெந்து மாண்ட மன்மதன் உருவினை இரதிவேண்டப் பரிந்துஅளித்த புண்ணியனே! இந்த விடக் கொடுமை தீர, யான் வேதனைக் குழியிலிருந்து மீள திருமருகல் இறைவா! நீ அருள மாட்டாயோ?'' என்று கதறித் துடிக்கின்றாள் வணிகனின் காதலி.

''என் அன்னையை, தந்தையை நீத்து உன்னைச் சார்ந்து வந்தேன்! நீ நச்சரவால் மாண்டு பட்டாய்! என் துன்பம் தீர்க்க வேறு யார் இருக்கிறார்கள்' வணிக குல மாமணியே! நானும் உயிர்துறந்து உன்னுடனே வந்து விடுகின்றேன்'' என்று கதறிக்கதறிக் கண்ணீர் விடுகின்றாள் அப்பெண்மணி.

நல்லவேளையாகத் திருமருகல் வருகை புரிந்து திருக்கோயில் வணங்கவந்த ஆளுடைய பிள்ளையார் திருச் செவிகளில் இப்பெண்மணி கதறியழும் அழு குரல் கேட்டது. அவர் விரைந்துவந்து அப்பெண் மணியிடம் நிகழ்ந்ததெல்லாம் கேட்டறிந்து இந்தளப் பண்ணில் திருமருகல் இறைவரிடம் முறையிட்டுப் பாடலானார்.

''சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே''

''சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள்ஏ சறவே''

''பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறையொன் றுடையாய் மருகல்
புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்
தலரும் படுமோ அடியாள் இவளே''

''வழுவாள் பெருமான் கழல்வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே''

என அப்பெண்மணியின் துயரத்தை எல்லாம் ஒரு பதிகம் முழுவதும் பலபட விரித்துத் திருஞான சம்பந்தர் பாடிய அளவில், நச்சரவத்தால் மாண்டு பட்டிருந்த வணிகன் பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்ற அற்புதம் நிகழ்ந்து விட்டது.

இவ்வற்புத நிகழ்ச்சியைத் தெய்வச் சேக்கிழார் பெருமான்

''கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர்
கருணையினாற் காரிகையாள் தனக்குநல்கப்
பற்றிய வாள் அரவுவிடந் தீருமாறு
பணைமருகற் பெருமானைப் பாடலுற்றார்''
(திருஞானசம்பந்தர் புராணம் - 481)

''சடையானை எவ்வுயிர்க்கும் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்றும் எரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையில் துயின்றானும் பரவும் கோலம்
உடையானை '' உடையானே தருமோ இந்த
ஒள்ளிழையாள் உன்மெலிவு? என்றெடுத்துப் பாட''
(திருஞானசம்பந்தர் புராணம் - 482)

''பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்த
பொருவில்திருத் தொண்டர்குழாம் பொலிய ஆர்ப்ப
அங்கையினை உச்சியின்மேற் குவித்துக் கொண்டங்
அருட்காழிப் பிள்ளையார் அடியில் வீழ்ந்த
நங்கையவள் தனைநயந்த நம்பி யோடு
நானிலத்தில் இன்புற்று வாழும் வண்ணம்
மங்குல்தவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார்''
(திருஞானசம்பந்தர் புராணம் - 483)

''வியன்ஞாலமெல்லாம் விளங்கும் புகழே'' என நிறைவடையும் இத்திருமருகல் பதிகத்தைப் பாடினால் பாடுவார் துயரமெல்லாம் தீர்வது திண்ண மாகும். நச்சரவத்தால் மாண்ட வணிகனை உயிர்த் தெழச் செய்த அற்புதத் திருப்பதிகம் இதனைப் பாடு வார் கொடுந்துயரம் தீர்ந்து மங்கலங்கள் நிறையும் பெருவாழ்வு பெறுவர் என்பது உறுதி.

திருஞானசம்பந்தர் பாடியருளியுள்ள இரண் டாம் திருமுறையில் நச்சரவம் கடித்து மாண்ட மயிலை பெருவணிகராம் சிவநேசரின் திருமகள் பூம்பாவையை மீண்டும் உயிர்த்தெழச் செய்த இன் னொரு அற்புதத் திருப்பதிகமும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

திருமருகல் பதிகம் நச்சரவம் கடித்து மாண்ட வணிகரின் உடலிருக்க அவனைத் திருஞானசம்பந்தர் உயிர்த்தெழச் செய்த அற்புதம் கொண்டது; திருமயிலை திருப்பதிகமோ 7 வயதில் மாண்டுபட்ட வணிகரின் மகள் பூம்பாவையின் வெறும் அஸ்திக்குடம் மட்டுமே இருக்க, அரவம் கடித்த துயரச் சம்பவம் நிகழ்ந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, திருமயிலை வருகை புரிந்த திருஞானசம்பந்தர் அஸ்திக்குடத்தை வரவழைத்துச் ''சீகாமரம்'' பண்ணில் ''மட்டிட்ட புன்னையங் கானல்'' எனத் தொடங்கும் பதிகம் பாடி அஸ்திக் குடத்திலிருந்து பூம்பாவையைப் பன்னிரண்டு வயது பருவமங்கையாக உயிர்த்தெழச் செய்த உன்னத அற்புதம் கொண்டது என்பது நம்மை வியக்கச் செய்து பரவசப்படுத்தும் ஒப்பற்ற அதிசய அற்புதம் ஆகும்,

''பன்னு தொல்புகழ் திருமயி லாபுரிப் பதியில்
மன்னுசீர்ப்பெரு வணிகர்தந் தோன்றலார்''

''பொய்ம்மை நீக்கிய பொருளிது எனக்கொளும் உள்ளச்
செம்மை யேபுரி மனத்தினார் சிவநேசர்''

என திருமயிலையில் பெருவணிகராய் வாழ்ந்த சிவநேசரைப் பற்றிக் கூறுகின்றார் சேக்கிழார் பெருமான்.

அவருக்குத் திருஞானசம்பந்தர் மேல் அள விலாப் பக்தி இருந்து வந்தது. தாம் கப்பல் வணிகத் தால் ஈட்டிய குபேரச் செல்வம் அனைத்தும், தம் ஒரே மகள் பூம்பாவையும் திருஞானசம்பந்தருக்கே தாம் உரிமை ஆக்கிவிட்டதாகத் தம் சுற்றத்தாரிடம் கூறிக் கூறிப் பெருமகிழ்வு எய்துவார் சிவநேசர்.

''சுற்றம் நீடிய கிளை யெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் யான்
என்று மொழிந்தார்''
(திருஞானசம்பந்தர் புராணம், 1053)

இத்தகைய பக்தியுடையவரான சிவநேசரும், அவர்தம் தவப்புதல்வி பூம்பாவையும் சிவத்தொண் டில் ஈடுபட்டிருந்த வேளையில் ஒருநாள் பூப் பறிக்க நந்தவனம் சென்றார் பூம்பாவை. மௌவல் மாதவிப் பந்தரில் மறைந்திருந்த ஒரு முள் எயிற்று நச்சாரவம் பூம்பாவையைத் தீண்டிவிட, பூமாலைத் தீயில் இட்டதைப் போல விடம் ஏறித் தரையில் விழுந்து கண்மூடிக் கொண்டாள் பூம்பாவை.

''வெவ்விடம் ஒழித்து பூம்பாவையின் உயிரை மீட்டுத் தருபவர்க்கு அளவிலாச் செல்வம் வெகுமதி யாகத் தரப்படும்'' என்று பறை அறைவித் தார் சிவநேசர்.

பாம்பு கடித்து மூன்று நாட்கள் வரை பூம்பாவையின் உடலைப் பாதுகாத்து எண்ணற்ற மருத்துவரைக் கொண்டு சிகிட்சை செய்தும் ஒரு பயனும் இல்லாமல் போய்விடவே ''இது விதி'' எனத் தெளிந்த சிவநேசர் பூம்பாவையின் உடலை எரியூட்டித் திருஞானசம்பந்தர் திருமயிலை வரும் போது ''காட்டுவேன்'' எனக் கூறி அஸ்தியை ஒரு குடத்தில் இட்டு, அஸ்திக்குடத்தை ஒரு கன்னி மாடத்தில் வைத்து நாள்தோறும் பூசை முதலானவற்றைச் செய்து வந்தார்.

''உடைய பிள்ளையார்க் கெனஇவள் தனை
உரைத்த அதனால்
அடைவு துன்புறு வதற்கிலை யாம்நமக்கு என்றே
இடரொழிந்தபின் அடக்கிய என்பொடு சாம்பல்
புடைபெருத்த கும்பத்தினிற் புகப்பெய்து
வைப்பார்''

''கன்னி மாடத்தில் முன்புபோற் காப்புற அமைத்துப்
பொன்னும் முத்துமேல் அணிகலன் பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி
அதன்மேல்
மன்னு பொன்னரி மாலைகள் அணிந்துவைத்
தனரால்''

''மாலை சாந்தொடும் மஞ்சனம் நாடொறும் வழாமல்
பாலின் நேர்தரும் போனகம் பகல்விளக் கிணைய
சாலு நன்மையில் தருவன நாடொறுஞ் சமைத்தே
ஏலு மாசெய யாவரும் வியப்பெய்து நாளில்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1066, 1067, 1068)

என சிவநேசர் செய்த செயல் யாவரையும் ''இப்படி ஒரு தந்தையா?'' என வியக்கச் செய்தது என்று பாடுகிறார் சேக்கிழார் பெருமான்.

பூம்பாவை நச்சரவம் கடித்து மாண்ட துயரச் சம்பவம் நிகழ்ந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, திருவொற்றியூரை வழிபட்டு விட்டுத் திருமயிலை அருள்மிகு கபாலீச்சுரத்திற்கு எழுந்தருளுகின்றார் நம் திருஞானசம்பந்தப் பெருமான்.

திருமயிலையிலிருந்து திருவொற்றியூர் வரை பந்தல் அமைத்து, மகர தோரணம், கமுகு வாழை மரங்கள் அலங்கரிக்கச் செய்து திருஞானசம்பந்தருக்கு மாபெரும் வரவேற்பை நல்குகின்றார் சிவநேசர்.

''ஆறுகூடினார் திருமகனார் அணைந்தார்'' என்று எல்லையிலாத மகிழ்ச்சியுடன் சிவநேசரும், சிவநேசச் செல்வர் பலரும் வரவேற்கத் திருமயிலை வரும் திருஞானசம்பந்தர் திருமயிலை கபாலீச்சரத்தை வழிபட்ட சிறப்பினை நம் சேக்கிழார் பெருமான் பக்திச்சுவை நனிசொட்ட சொட்ட வர்ணிக்கின்றார்.

''கங்கை வார்சடை யார்கபா லீச்சரத் தணைந்து
துங்க நீள்சுடர்க் கோபுரம் தொழுதுபுக் கருளி
மங்கை பங்கர்தங் கோயிலை வலம்கொண்டு
வணங்கிச்
செங்கை சென்னிமேற் குவித்திடத் திருமுன்பு
சேர்ந்தார்''

''தேவ தேவனைத் திருக்கபா லீச்சரத் தமுதைப்
பாவை பாகனைப் பரிவுறு பண்பினாற் பரவி
மேவு காதலின் விரும்பிய விரைவினால் விழுந்து
நாவின் வாய்மையாற் போற்றினார் ஞானசம்பந்தர்''

(திருஞானசம்பந்தர் புராணம் 1077, 1078)

இவ்வாறு திருக்கபாலீச்சரத்து அமுதை வழிபட்டுத் திருக்கோயிலின் வெளியே வருகின்ற போது தான் திருஞானசம்பந்தரிடம் சிவனடியார்கள் சிவநேசருடைய பக்திச் சிறப்பையும், அவர்தம் திருமகளார் பூம்பாவைக்கு ஐந்தாண்டுகளுக்கு முன் நேர்ந்த துயரச் சம்பவத்தையும், அவருடைய அஸ்திக் குடத்தைத் திருஞானசம்பந்தரிடம் காட்ட வேண்டி சிவநேசர் கன்னிமாடத்தில் வைத்துப் பாதுகாத்து வருவதையும் கூறுகிறார்கள்.

நிகழ்ந்த அனைத்தும் திருச்செவி மடுத்த நம் திருஞானசம்பந்த சுவாமிகள்

''ஒருமை உய்த்த நல் லுணர்வினீர்! உலகவர் அறிய
அருமையாற்பெறு மகள்என்பு நிறைந்த அக் குடத்தைப்
பெருமயானத்து நடம்புரிவார் பெருங்கோயில்
திருமதிற் புற வாய்தலிற் கொணர்'' கென்று செப்ப.''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1080)

என்று திருவருள் புரிய, அவ்வாறே அஸ்திக் குடத்தைச் சிவிகையில் வைத்து கபாலீச்சரம் மேற்கு மதில் அருகே கொண்டுவந்து திருஞானசம்பந்தருக்குக் காட்டுகிறார்கள்.

''என்ன நிகழவுள்ளது?'' என்பதை நேரில் காணவேண்டி மாடம் ஓங்கிய மயிலை மாநகருள்ளவர்கள், மற்றும் இச்செய்தியைக் கேள்விப்பட்ட பற்பல பகுதி வாழ் மக்கள், சமண, புத்த சமயத்தவர்கள் எல்லோரும் வந்து கூடி விடுகிறார்கள்.

மக்கள் வெள்ளம் கடலெனப் பெருகி நின்ற அவ்வேளையில் சீகாமரம் பண்ணில் திருஞான சம்பந்தர் பாடும் அற்புதப் பதிகம்தான் இது :

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.'' 1

''மைப்பயந்த ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஐப்பசி ஓண விழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்'' 2

''வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்'' 3

''ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலை கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்'' 4

''மைப்பூசு ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார்
கொண்டாடும்
தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்'' 5

''மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆனே றூரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்'' 6

''மலிவிழா வீதிமடநல்லார் மாமயிலைக்
கலிவிழா கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
பலிவிழா பாடல்செய் பங்குனி உத்திரநாள்
ஒலிவிழா, காணாதே போதியோ பூம்பாவாய்'' 7

''தண்ணா அரக்கன்தோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்'' 8

''நற்றாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்கள் ஏத்தும் கபாலீச் சரம்அமர்ந்தான்
பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்'' 9

''உரிஞ்சாய வாழ்க்கை அமண் உடையைப் போர்க்கும்
இருஞ்சாக்கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரம்அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்'' 10

''கானமர் சோலைக் கபாலீச் சரம்அமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்தன் நலம்புகழ்ந்த பத்தும்வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே'' 11

இப்பதிகம் திருஞானசம்பந்தர் பாடப்பாட அஸ்திக்குடத்தில் பூம்பாவைக்கு உயிரும் வடிவும் சிறப்புறத் தோன்றி வளர்ந்த சிறப்பைச் சேக்கிழார் பெருமான் நம் கண்காண நன்கு விவரிக்கின்றார்.

இப்பதிகத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ''அமுதம்'' என்கிறார் சேக்கிழார். முதற்பாட்டிலேயே பூம்பாவைக்கு வடிவம் உண்டாகியது; அடுத்தடுத்துப் பாடல்கள் 2 முதல் 9 பாடல்கள் பாடப்பாட 7 வயதில் மறைந்துபட்ட பூம்பாவை, இன்று 12 வயதில் எத்தகைய வடிவினளாக வளர்ந்து இருப்பாளோ அப்படிப்பட்ட வளர்ச்சி பத்தாம்பாடல் பாடும்போது நிறைவுபெற்று விட்டது. பூம்பாவை முழுமையான வடிவுடன் தோன்றியதைக் கண்டு, ''திருக்கடைக் காப்பு'' பாடிப் பதிகத்தைத் திருஞானசம்பந்தர் நிறைவு செய்தார் என்று விவரிக்கின்றார் சேக்கிழார் பெருமான்.

''மன்னு வார்சடையாரை முன்தொழுது ''மட்டிட்ட''
என்னும் நற்பதிகத்தினிற் ''போதியோ'' என்னும்
அன்ன மெய்த்திரு வாக்கெனும் அமுதம்அவ்
வங்கம்
துன்ன வந்து வந்து உருவமாய்த் தொக்கதுஅக்
குடத்துள்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1088)

''எடுத்த பாட்டினில் வடிவுபெற்று இருநான்கு
திருப்பாட்டு
அடுத்த அம்முறைப் பன்னிரண்டு ஆண்டளவு
அணைந்து
தொடுத்த வெஞ் சமண்பாட்டினில் தோன்றிடக்
கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல்
விரித்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம், 1091)

தாமரைப்பூ மலரத் திருமகள் தோன்றுவது போல, வளையல் அணிந்த திருக்கைகள் முன்தோன்றக் குடத்தை உடைத்துக் கொண்டு ''பூம்பாவை'' தோன்றிய அற்புதத்தைக் கண்ட மக்கள் வெள்ளம் ''அரகர'' ''அரகர'' என்று முழங்க, அவ்வோங்கிய ஓசை

## வாரியார் சொற்பொழிவில் கேட்டு மகிழ்ந்தது

கற்றார்க்கும், கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பாக அமைந்து விளங்கின அமரர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விரிவுரைகள்.

அறத்தின் பெருமையைஅவர்போல் மிகச் சிறப்பாக எடுத்துரைத்த ஆன்றோர் யாரும் இல்லை எனலாம்.

''வாரி வாரி வழங்குங்கள் இந்த வாரியாருக்கும் சேர்த்தே சொல்லுகின்றேன். வாரிவாரி வழங்குங்கள்'' என்று நயம்பட உரைப்பார் நம் சுவாமிகள்.

அதிர்ஷ்டம் என்பது நாம் கேட்டபடி, நாம் கேட்கும் நேரத்தில் வராது. அதிர்ஷ்டம் - அது இஷ்டமாகத்தான் வரும். அதனால் தான் அதற்கு அதிர்ஷ்டம் என்று பேர். இப்படி எதையும் எளிமையாக - இனிமையாக என்றென்றும் நம் நெஞ்சில் பதியும் படி விளக்கிய பெருமை வாரியாருக்கே உரியது.

- நம் இந்து சமய அறநிலையத் துறையின் - சிறப்புப் பணியாளர்
திருமிகு வை. பாண்டியன், இ.ஆ.ப. அவர்கள்.

வானகம் போய்த் தொட்டது என்கிறார் சேக்கிழார். தேவரும், முனிவர்களும் இவ்வற்புதத்தைக் கண்டு மலர்மாரி பொழிகிறார்கள்.

''ஆங்கனம் எழுந்து நின்ற அணங்கினை நோக்கு வார்கள்
''ஈங்கிது காணீர்'' என்னா அற்புதம் எய்தும் வேலைப்
பாங்குசூழ் தொண்டர் ஆனோர் ''அரகர'' என்னப் பார்மேல்
ஓங்கிய ஓசை உம்பர் நாட்டினை உற்ற தன்றே''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1092)

''தேவரும் முனிவர் தாமும் திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி பொழிந்தனர், ஒழிந்த மண்ணோர்
யாவரும் ''இருந்தவண்ணம் எம்பிரான் கருணை'' என்றே
மேவிய கைகள் உச்சி மேற்குவித்து இறைஞ்சி வீழ்ந்தார்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1093)

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றல் அமுதத்திற்கு உண்டு என்பர் ஆன்றோர். பூம்பாவையை உயிர்ப்பித்து எழச் செய்த இத் திருமயிலை திருப்பதிகம் ''அமுதம்'' என்பதனாலேயே சேக்கிழார்

''அன்னமெய்த் திருவாக்கு எனும் அமுதம்''

என்று இப்பதிகம் பாடப்பாட பூம்பாவை உயிரும் உடலும் பெற்றார் என்று அதிசயிக்கின்றார்.

மேலும் இப்பதிகம் இப்புவியில் பிறந்தார் பெறும் பயன் கூறும் பதிகம் என்பதையும் சேக்கிழார்

''மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார்''

(திருஞானசம்பந்தர் புராணம் - 1087)

என்ற பாடலால் விளக்கியிருக்கக் காணுகின்றோம்.

எல்லோரும் பக்திப்பூண்டொழுகும் சிவனடியாராக வாழ்தலும், சிவனடியார்களுக்கு ''அன்னம் பாலிப்பு'' மகேசுவரப் பூசை புரிதலும், சிவபெருமான் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களைக் கண்ணாரக் கண்டு மகிழ்தலுமே மண்ணினில் பிறந்தார் பெறத்தக்க மாண்பயன் என்பதை இத்திரு மயிலைத் திருப்பதிகம் நன்கு தெளிவு படுத்துகின்றது.

இத்திருமயிலைத் திருப்பதிகம் பாடினால் இளமையில் துர்மரணம் உண்டாகாது; நோயுற்று வருந்தும் இளஞ்சிறாரைக் கருத்தில் இருத்தி இத்திருப்பதிகம் பாட நோய் பறந்தோட அவர்கள் நூறாண்டு சுகவாழ்வு பெறுவார்கள் என்பது திண்ணம்.

(இரண்டாம் திருமுறை அடுத்த இதழில் நிறைவு பெறும்)

★★★

# கங்கையில் கலந்த மழைத்துளி!

**- கலைமாமணி மா. லட்சுமணன்**

(நீதிக் கதை)

ஆன்மாவை - நீர் நனைப்பதில்லை. நெருப்பு சுடுவதில்லை - காற்று உலர வைப்பதில்லை!... ஸ்பரிச உணர்வுகளெல்லாம் உடலுக்குத்தான். இன்னார் எனப் பெயர் சொல்லி அழைக்கிறோமே அதுகூட உடலைத்தான். ஆன்மாவை அல்ல! ஆன்மாவுக்குப் பெயர் கிடையாது.

எது எங்கே தோன்றுகிறதோ அது அங்கேயே சென்றடைந்து இரண்டறக் கலந்து விடுகிறது - இதுவே தத்துவம்.

ஆசையே பிறவிக்கு மூல காரணமாகிறது. ஆசையுள்ள மனிதர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கிறார்கள்.

ஆசை அறுமின்! ஆசை அறுமின் ஈசனோடாயினும் ஆசைஅறுமின்! என்கிறது வேதாந்த தத்துவம்.

தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டும் ஒட்டாமலும் - பற்றற்று இரு... மனதை ஓர் நிலை நிறுத்தி பரமானந்தத்தை நாடு! இதெல்லாம் உயர்ந்த உபதேசம்தான். நடைமுறையில் கடைப்பிடிக்கும் போதுதான் இதன் கடினம் புரியும். புரியாத வரை எல்லாமே கடினம்! புரிந்து விட்டால் எல்லாமே சுலபம்! காய் கனிந்து விட்டால் தன்னால் காம்பை விட்டுப் பிரிந்துவிடும் - காலம் பிரித்து விடும்!

பாதுகாப்பாக இருப்பதெல்லாம் ஒரு கால கட்டத்தில் பயனற்றுப் போகும் - விடுபட்டுப் போகும்!

பழத்துக்குள்ளே உள்ள சுளையை பழத்தின் தோல்தான் பாதுகாக்கிறது. சுளையை உண்ணும் போது தோல் எங்கேயோ போய் விழுகிறது -

அரிசியைப் பாதுகாக்கும் உமிகூட அப்படித் தான்.... மனித வாழ்வு இதற்கு விதி விலக்கல்ல!...

விடுபடுவது இயற்கையின் விநோதம்!

"மூத்தோர் சொல் வார்த்தையும் முதுநெல்லிக்காயும் - முன்னே கசக்கும் பின்னே இனிக்கு"மென ஒரு முது மொழியுண்டு.

இவைகள் அனுபவ மொழிகளாதலால் - நடைமுறையில் மாறுபடுவதில்லை.

பாரதப்போரிலே அர்ஜுனனுக்கு - தேரோட்டினான் கண்ணன்.

பார்த்தனுக்கு சாரத்யம் பண்ணியதால் பார்த்த சாரதி எனப் பெயர் பெற்றான் -

போர்க்களத்துக்கு வரும் வரையில் - துணிவோடிருந்த அர்ஜுனனை சற்று அசைத்துப் பார்த்தது பங்காளிகள் பாசம்.... காண்டீபத்தைக் கீழே போட்டு விட்டான் - கண்ணன் அதிர்ச்சியடைந்தான்... உனது செய்கையில் ஏன் இந்த மாற்றம் எனக் கேட்டான் - எதிரே நிற்பவர்கள் எல்லோரும் - உறவினர்கள் பங்காளிகள்... இவர்கள் மீது அம்பெய்ய மாட்டேன் என்றான்!

இந்த ஞானோதயம் இப்போதுதான் பிறந்ததா? என்றான் கண்ணன் - மௌனம் சாதித்தான் விஜயன் - போர் வேண்டாம் வேண்டாமென்று பலமுறையும் தடுத்தார் தருமர் - அப்போதெல்லாம் போர் நடந்தே திரவேண்டுமென்று துள்ளினாய்.... இப்போது காண்டீபத்தைக் கீழே போட்டுவிட்டாய்.... கடமையைச் செய்... என்றான் கண்ணன். பார்த்தன் பின் பணிந்தான் -

குருக்ஷேத்திரத்திலே கீதை தோன்றியது. தொடர்ந்து நடந்த பாரதப் போரிலே அபிமன்யுவை இழந்த அர்ஜுனன் ஆற்ற ஒண்ணாத் துயரடைந்தான் - கதறினான்! துடித்தான்.

"என் அருமை மகனை இழந்து விட்டேனே" என கண்ணனிடம் அழுதான். வேத சாஸ்திரங்களைக் கற்றவன் நீ!... வாழ்க்கைத் தத்துவம் புரிந்தவன் நீ!...

"வந்தவன் போய்விட்டான்! வராதவன் போக மாட்டான்.... நீ எதற்காக இந்த பூமிக்கு வந்தாயோ அதைச் செய்து முடி!" என அறிவுரை கூறினான் பரந்தாமன்!...

* * *

# பாரதம் காப்பாய் கணபதியே

- P.V. சண்முகம், எம்.ஏ., பி.எட்.

உமையவள் மைந்தா கணபதியே
உலகம் உய்ய அருள்வாயே
மோதகம் விரும்பும் கணபதியே
முழுமுதற் கடவுள் கணபதியே
பார்வதி மைந்தா கணபதியே
பாவம் போக்கிட அருள்வாயே
சிவனார் மகனே கணபதியே

சீரெலாம் அளிப்பாய் கணபதியே
மூஷிக வாகன கணபதியே
முத்தமிழ் தருவாய் கணபதியே

தந்தையும் தாயும் உலகினிலே
உயர்வென உணர்த்திய கணபதியே
பாரதம் எழுதிய கணபதியே
பாரதம் காப்பாய் கணபதியே!

கண்ணன் என்ன சொல்லியும் அர்ஜுனன் ஆறுதல் அடையவில்லை. பிள்ளை மீது கொண்ட பாசம் - அவனது நெஞ்சத்தைப் பிழிந்து எடுத்தது.

''அர்ஜுனா - உன் மகன் - சொர்க்கத்திலே ஆனந்தமாக இருக்கிறான்... உன்னைப் பற்றி எள் ளளவும் அவன் கவலைப்படவில்லை! நீதான் கண்கலங்குகிறாய் - வீணே கவலைப்படுகிறாய்'' என்றான் கண்ணன்.

''கவலைப்படாமல் இருக்க முடியுமா? அபிமன்யூ என் மீது உயிரையே வைத்திருந்தான்... ஒருமுறை அவனை என் கண்ணில் காட்டு'' என்று கெஞ்சினான் அர்ஜுனன் -

''நீ அவனைப் பார்க்காமலிருப்பது நல்லது! பார்த்தால் வேதனைப்படுவாய்'' என்றான் மதுசூதனன்.

பார்த்தே தீரவேண்டும் என சிறுபிள்ளை போல பிடிவாதம் பிடித்தான் காண்டீபன்!

''சொன்னால் கேட்கமாட்டாய்! வா என்னோடு'' என - வில் விஜயனை அழைத்துக்கொண்டு விண்ணுலகம் சென்றான் மாயக்கண்ணன்!

அங்கே - சொர்க்கத்தில் - ஆனந்தப் பெருக்கோடு பொன்னூஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தான் அபிமன்யு!

கண்ணனையும் காண்டீபனையும் அவன் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை!...

''மகனே அபிமன்யூ!'' என இரு கரங்களையும் நீட்டியபடி பொன்னூஞ்சல் அருகே ஓடினான் பார்த்திபன்

''யார் நீ?'' எனக் கேட்டான் அபிமன்யூ

''நான் தான் உனது தந்தை அர்ஜுனன்!'' என்றான்!...

உன்னை எனக்குத் தெரியாது என்று கூறினான் அபிமன்யூ! தூக்கிவாரிப்போட்டது! துடித்தான் விஜயன்.

அர்ஜுனா! இதனைத்தான் உனக்கு முன் கூட்டியே விளக்கினேன். ஆன்மாவுக்கு உன்னைத் தெரியாது. உடலை நினைத்துக் கொண்டு உயிரிடம் பேசுகிறாய் - .... இரண்டும் வெவ்வேறாகி விட்ட வேற்றுமை உனக்கு விளங்கவில்லை!...

''அபிமன்யூ புண்ணியம் செய்தவன் பிறவாவரம் பெற்று சொர்க்கத்துக்கு வந்துவிட்டான் கங்கையில் விழுந்த மழைத்துளிபோல - கங்கை நீர் வேறு - மழைநீர் வேறு என்று தெரியாத நிலையில் கலந்து விட்டான் - அந்த மழைத்துளியை இனி பிரிக்க முடியாது... வா என்னோடு''. என அழைத்துப் போனான் கண்ணன் -

அர்ஜுனன் தெளிவு பெற்றான்!...

மனித வாழ்வில் இதுபோன்ற நீதி நிறைந்த தத்துவக்கதைகள் ... பெரிதும் பயனளிக்கும். அவை பாயும் மனதுக்கு ஆறுதல் அளிக்கும்.

***

# அருணாசல அருள் வெள்ளம்


- நெருல் ராமகிருஷ்ணன், மும்பை

மாஸானாம் மார்கஷீர்ஹோஹம் - மாதத்தில் மார்கழியாவது நான் என்று ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீமத் பகவத்கீதையில் பறைசாற்றுகிறார். கார்த்திகை மாதர் கள் கந்தனுக்குப் பாலூட்டி சீராட்டினபடியால் கந்தனை கார்த்திகேயன் என்று சொன்னாலும், கார்த்திகை மாதம் சிவனுக்குத் தான் மிக சிறந்தது. பௌர்ணமி தினம் சந்திரன் பூர்ணகலையில்நிற்கும் நாள் - வழிபாட்டுக்குரிய நாள். அனேகமாய் ஒவ்வொரு மாத பௌர்ணமியும் ஆண்டவனுக்கு / பராசக்தி தேவிக்கு வழிபடும் நாளாக இருக்கிறது. எந்த க்ஷேத்திரத்தில் பௌர்ணமி வருகிறதோ அதைக் கொண்டே அந்த மாதத்தின் பெயரே உள்ளது. சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் பௌர்ணமி. ஒவ்வொரு பௌர்ணமியுமே, ஸ்ரீவித்யா உபாஸகர் கள் தேவிக்கு நவாபரண பூஜை செய்வது சிறந்த பழக்கம். பௌர்ணமியில் ஸத்ய நாராயண விரத, பூஜை செய்வதும் வழக்கத்திலுள்ளது. மும்மூர்த்தி களான ப்ரம்மாவுக்கு சிருஷ்டித்தொழில் ச்ரேஷ்டருக்கு பிரத்யேகமாக வழிபாடோ கோயிலோ அல்லது உத்ஸவங்களோ இல்லவே இல்லை. மூலஸ்தான விக்ரஹமாக புஷ்கர் க்ஷேத்திரத்தில் உள்ளது. திருச்சி - உத்தமர்கோவிலில் மும்மூர்த்தி க்ஷேத்திரம் எனப் பெயர், வியாழன், பக்தர்கள் கோரிக்கைகளை கூறி பூஜை செய்யும் வழக்கம் உள்ளது.

| க்ஷேத்திரம் | மாதம் | தமிழ் மாதம் | விசேஷம் |
|---|---|---|---|
| சித்திரை | சித்திரை | சித்திரை | சித்ரகுப்தன் பூஜை |
| விசாகம் | விசாக | வைகாசி | முருகன் பிறந்தநாள் |
| கேட்டை | ஜேஷ்டா | ஆனி | அருணகிரிநாதர் பிறந்தநாள் |
| உத்ராடம் | ஆஷாட | ஆடி | வ்யாஸ ஜயந்தி; குருபூர்ணிமை |
| ஸ்ராவண | ஸ்ராவண | ஆவணி | அமர் நாத் பனிசிவ தரிசனம் |
| புரட்டாதி | பாத்ரபத | புரட்டாசி | உமா மஹேஸ்வர வ்ரதம் |
| அஸ்வினி | ஆஸ்வின | ஐப்பசி | அன்னாபிஷேகம் |
| கார்த்திகை | கார்த்திகை | கார்த்திகை | அண்ணாமலை ஜோதி திருவிழா |
| திருவாதிரை | மார்கசீர்ஷ | மார்கழி | நடராஜ நடனம் தரிசனம் |
| பூசம் | பௌஷ் | தை | முருகனுக்கும் அம்பாளுக்கும் விசேஷம் |
| மகம் | மாக | மாசி | தீர்த்த விசேஷம்; தெப்பம் |
| உத்திரம் | பல்குன | பங்குனி | பார்வதி கல்யாணம் காமாக்ஷி கல்யாணம், லக்ஷ்மி கல்யாணம், ஸீதா கல்யாணம் வள்ளி கல்யாணம் ஐயப்பன் பிறப்பு |

மேற்கண்ட மாத - பௌர்ணமி அட்டவணை பார்த்தால் எல்லாமாத பௌர்ணமியும் சிவனுக்கு சிறந்து உள்ளது. கார்த்திகை ப்ரத்யேகமாக சிவனுக் குரியதாகவுள்ளது. கார்த்திகை திங்கள் தினமும் சிவனுக்கு விசேஷம். சில வருஷங்களாகத்தான், திருவண்ணாமலையையே வலம் வருவது என்றும் இப்போது மக்கள் ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு பௌர்ணமியிலும் வலம் வருவது என்ற வழக்கம் கொண்டுள்ளனர். பிரத்யேக வண்டிகள் அன்று விடப் படுகின்றன. அப்படி என்ன ஈர்ப்பு அந்த திருவண்ணா மலைக்கு - பார்ப்போமா?

அஹங்காரம் அல்லது தான்தான் பெரியவன் என்கிற எண்ணம், மனிதர்களுக்கல்ல, தேவர் களுக்கல்ல, ராக்ஷஸர்களுக்கல்ல, ஏன், ப்ரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும்கூட இருந்தது. பிரம்மா சொன்னார் - நான்தான் படைப்பவன்; நானில்லையேல் இந்த பிரபஞ்சம் பெருகாதே என்று இறுமாப்புடன் பேசி னார். மஹாவிஷ்ணு, உன்னைப் படைத்ததே நான் தானே. நான் பிறந்தவர்களைக் காக்காவிட்டால் உலகத் திலுள்ளோர் எவ்வாறு வாழ்வர்? அதனால் நான்தான் பெரியவன் என்று மார்பு தட்டினார். இதுவும் ஒரு சிவலீலை போலும். அவர்கள் இருவர் முன்னே சிவன் தோன்றி சண்டை ஒன்றும் வேண்டாம். நான் ஒரு சிறிய பரிட்சை வைக்கிறேன். இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவரே பெரியவர் என்றார். இருவரும் ஒப்புக் கொண்டனர். என்ன



பரிக்ஷை என்று வினவ, சிவன் தான் ஒரு ஜ்யோதி ரூபம் தரிக்கப் போவதாயும், அதன் அடியையோ முடியையோ காண்பவர் மேன்மையானவர் என்றார். மஹாவிஷ்ணு வராக - பன்றி உருவம் எடுத்து, பூமியைத் துளைத்து சென்று அடியைக் காணப் புறப்பட்டார். பிரம்மா, அன்ன வாகனமாகி மேலே பறந்து சென்று முடியைக் காண விழைகின்றார். மஹாவிஷ்ணு பூமி யினுள்ளே போகப்போக ஜ்யோதி பிழம்பு நீண்டு கொண்டே போகவே தளர்ந்து பூமியின் தளம் சேர்ந்து தான் அடியைக் காண முடியவில்லை எனத்தன் இய லாமையை ஒப்புக்கொண்டார். நான்முகனும் மேலே போக போக உடல் வலிவு தளர்ந்தது. ஜ்யோதி பிழம்பு நீண்டுகொண்டே போனது. என்ன செய்வது என யோசித்துக் கொண்டிருக்கும்போது ஒரு தாழம்பூ மடல் வந்து கொண்டிருந்தது. தாழம்பூவை நான் முகன் கேட்க அது சிவன் ஜடையிலிருந்து வருகிறேன் என்றது. பிரமன் தாழம்பூவிடம் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். தான் சிவன் முடியைப் பார்த்ததாகவும், அதற்கு சாட்சி தாழம்பூ என்று. பூமியில் வந்து வருத்தத் துடன் இருக்கும் தனது தகப்பனாரிடம், (விஷ்ணு) தான் பெருமகிழ்ச்சியுடன் சிவன் முடியைக் கண் டேன், சாட்சி இந்த தாழம்பூ என்றார். விஷ்ணு வியப்புற்றார். ஆனால் ஜ்யோதி பிழம்பான சிவன் உருவம் கொண்டு, பொய் சொன்ன பிரமனை தண்டித் தாராம். பிரமனுக்கும் 5 தலை இருந்தது, பொய் சொன்னதற்காக ஒரு தலையைத் துண்டித்தார் என திருக்கண்டியூர் (தஞ்சாவூர் அருகில் உள்ள தலம்) தலபுராணம் சொல்லும். பொய் சாட்சி சொன்ன தாழம்பூ தனது பூஜைக்கு உதவாது, பொய் சொன்ன பிரம்மனுக்கு கோவில் வழிபாடு கிடையாது எனவும் சாபம் இட்டார் சிவன்.

ஜோதி வடிவமான தினம் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம். (கந்த புராண சிவ ரக்ஷஸ்யம் சிவராத்திரி தினம் என கூறும்). தேவர்கள் விருப்பத் திற்கேற்ப ஜோதிவடிவான சிவன், மலையானா சுயம்பு சிவலிங்கமும் ஆனார். அருணாசலம் என்பது பெயர். சிவந்த - மலையே திருவண்ணாமலை என தமிழில் சொல்வர். அவரை அண்ணாந்து பார்க்க வேண்டும் அல்லவா. அந்த நிகழ்ச்சியையொட்டியே கார்த்திகை மாத கார்த்திகையன்று திருவண்ணா மலை உச்சியில் பெருந்தீபம் ஏற்றப்படுகிறது. தீபம் ஏற்றப்படும் மலை 2668 அடி உயரமாகும். பத்து நாட்கள் ப்ரம்மோத்ஸவமும் நடைபெறுகிறது. அந்த கார்த்திகை ஜோதி பிழம்பை, சிவனை, காணப் பல்லாயிரப் மக்கள் வருகிறார்கள். கார்த்திகை ஜ்யோதி தரிசனம் நமது அந்தகாரத்தை விலக்கி (இருட்டை பொக்கி ஞானத்தை நல்கும் (ஞான வொளியை ஈயும்) என்பது ஐதீகம்.

திருவண்ணாமலையை பஞ்சபூத சிவத்தலம் என்பர். திருவண்ணாமலை ஜோதித்தலம். திரு வானைக்கா - அப்பு - நீர் தலம்; காளஹஸ்தி - வாயு தலம். காஞ்சிபுரம் - ஏகாம்ரநாதர் - மண்தலம்

திருசிதம்பரம் - ஆகாயத்தலம். திருவண்ணா மலையை - ஞானமலை, ஜ்யோதிமலை, மோன மலை என்பர். கார்த்திகை திங்கள்கிழமை சிவவழி பாட்டுக்கு சிறந்தது என்பர். கார்த்திகை மாதமே சிவனுக்கு உகந்த நாளானதால் மாதம் முழுவதும் வீட்டில் வெளியே விளக்கு ஏற்றி வழிபடுவது குறிக்கத்தக்கது. சிவன் ஞான ஒளியை எல்லோருக்கும் அளிக்க வேண்டும் என்பது தத்துவம்.

திருவண்ணாமலைக்கு மற்றொரு சிறப்பு - அது ஒரு முக்தித்தலம். திருவாரூரில் பிறக்க முக்தி - பிறப்பது ஒருவர் கையில் இல்லை.

முன்பே பிறந்தவர்கள், இப்பிறவியில் பிறக்க முடியாது. காசியில் இறக்க முக்தி - இறப்பதும் ஒருவர் கையில் இல்லை.

காசியிலே இறக்க வேண்டும் என பல வருடங்கள் வாழ்வோர், ஏதோ ஒரு நிமித்தமாக காசி எல்லையை விட்டு அகல அவர் இறக்கிறார். அதனால் அதுவும் நம் செயலில் இல்லை.

சிதம்பரத்தை தரிசிக்க முக்தி - தில்லை அம்பலத்தானை கண்டு தொழ முக்தி. தக்க வயதில் செல்லாதவர்களும், உடல்நலக் குறையினால் செல்ல முடியாதவர்களும், கண் குருடாயிருப்பவர்களும், சிதம்பரத்தை தரிசிக்க எப்படி முடியும்?

திருவண்ணாமலையை - நினைக்க முக்தி - இது எல்லோராலேயும், ஏழை பணக்காரர், சிறியவர், பெரியவர், உடல் நலம் குறைவானவர், நிறை வானவர் யாவரும் எங்கும் எப்போதிலும் செய்ய முடியுமே. நினைப்பதற்கு பணம் தேவையில்லை. ஆனால் மனம் வேண்டும். மாணிக்க வாசகரின் சிவ புராணச் சொல் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" ஞாபகம் வரும். திருவண்ணாமலையை நினைப்பதற்கும் சிதம்பரத்தை தரிசிக்கவோ, காசியில் இறக்கவோ, திருவாரூரில் இறக்கவோ அவன்ருள் வேண்டும்.

அருணாசல புராணம் இதனை இவ்வாறு கூறும் :-

''தில்லையில் காண காசியில் இறக்க சிறக்கும்
ஆரூர்தனில் பிறக்க
எல்லையில் பெருமை அருணையை நினைக்க
எய்தலாம் முக்தி என்று''

திருவண்ணாமலை - ஞானமலை என்றோம். அது சிந்தாமணி போன்று, கற்பகத்தரு போன்று, காமதேனு போன்று வேண்டியதை அளிக்கும் மலை. அதனா லேயே பெரியவர்கள் சொல்வார்கள், அண்ணா மலை வலத்தின்போது தீயவை, கெட்டவை ஒன்றும் நினையாதே. ஏனெனில் கேட்டதைத்தரும் அருள் மலை அது. தீயவை நினைத்தால் தீயவை நடந் திடும். நம சிவாய என்பது சிவபஞ்சாக்ஷரம் - சிவ மந்திரம். அருணாசல என்பதும் பஞ்சாட்சரம். அருணா சல என்ற பஞ்சாக்ஷரம், நமசிவாய பஞ்சாக்ஷரத்தை விட மூன்று கோடி உயர்ந்தது என்பது சான்றோர் கள் வாக்கு. மந்த்ரங்களை எடைபோடுவது சரி யல்ல. இருந்தாலும் மந்த்ரபலன்களை - ஆன்றோர் கள் சான்றோர்கள் அனுபூதி நிலையை அனுபவத்தை நாம் ஆமோதிக்க வேண்டும் அல்லவா.

மலை உச்சி நடைபாதை 8 கி.மீ. என்பர். அண்ணாமலை வலம் வரும் பாதை 14 கி.மீ. ஆகும். முன்பு கூறியபடி திரு அண்ணாமலை வலம் வரும் போது, இறை சிந்தனையன்றி மற்றெதுவும் இல்லா மல் ஓம் அருணாசலா ஓம் நமசிவாய என்று மனத்துக்குள்ளேயே சொல்ல மனம் அமைதி பெறும். சாந்தி பெறும். ஒரு புது தெம்பு நமக்கு வரும். திருவண்ணாமலை ஸ்ரீ சக்ரம் போன்றது. அது காமதேனு கல்பதரு சிந்தாமணி, நினைத்ததை அளிக் கும். அதனால் நல்லதையே நினைக்கவேண்டும் வலம் வரும்போது, கெட்டதை நினைத்தாலும் பலனடைய வாய்ப்புண்டு. விழிப்புணர்வு தேவை.

அருணாசல மலை கிருத யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாக வும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலி யுகத்தில் கல்மலையாகவும் ஆனதாம். கார்த்திகை தீபத்தையும் அண்ணாமலையையும் கார்த்திகை வெண்பா இவ்வாறு விளக்கும்.

கங்கை யணிதீபம் கற்பூர தீபம் மலை
மங்கையொரு பங்கில் வளர் தீபம் பங்கயன் மால்
விண்பாரு நெடும் வணமேவிய அண்ணாமலையில்
பண்பாடுங் கார்த்திகை தீபம்.

சிவப்பிரகாச ஸ்வாமிகள் திருவண்ணா மலை தீபம் புற இருட்டையும் அக இருட்டையும் (அறியாமையை) நீக்கி மெய்ஞான ஒளி ஊட்டும் என சோணசைல மாலையில் இவ்வாறு கூறுவார்.

''கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அத்திருள் அனைத்தும்
சாய்ந்து நின்றெழுந்து விளங்குறும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

# வெற்றிக் கடவுள் விநாயகர்

- திருமதி தனலட்சுமி வெங்கடேசன், B.A

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்பது முதுமொழி. இங்கே கோயில் என்பது பெரும் பாலும் பிள்ளையார் கோயிலையே குறிக்கும் ஏனெனில் மற்றெந்த கோயில் இல்லாவிடினும் பிள்ளையார் கோயில் இல்லாத ஊரோ, சிற்றூரோ காணமுடியாது. ஏன்? பிள்ளையார் மாடம் இல்லாத வீடே கிடையாது என்று கூட சொல்லலாம். அந்த அளவுக்கு பிள்ளையார் நம் நாட்டில் கண்கண்ட கடவுளாக, வீடுகள், ஆற்றங்கரை, குளத்தங்கரைகள், தெருக்கள், மரத்தடிகள் ஆகிய எல்லா இடங்களி லும் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். விநாயகர் என்ற சொல்லுக்கு 'சிறந்த தலைவர்' என்பது பொருள், 'வி' என்றால் சிறப்பு. 'நாயகர்' என்றால் தலைவர் என்பது பொருள். இரண்டும் சேர்ந்து 'விநாயகர்' ஆயிற்று.

### உருவத்தின் தத்துவம்

தேவர்கள் யாவருக்கும் இல்லாத ஆற்றலைக் கொண்டவர். இடையின் கீழ் மனித உடம்பும், இடைக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பும், மேலே விலங்கின் தலையும் கொண்டவர். தெய்வ உடம்பு உயர்திணையாகவும் யானைத்தலை அஃறிணையாகவும், ஒரு பக்கம் கொம்பு இருப்ப தால் ஆண்பாலாகவும், மற்றொரு பக்கம் கொம்பு இல்லாமல் இருப்பதால் பெண்பாலாகவும், இவர் தேவராய், மனிதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர்திணையாய், அஃறிணையாய் விளங்குகின்றார்.

அண்டங்கள் அனைத்திலும் 'ஓம்' என்ற பிரணவ ஒலி எப்போதும் ஒலித்துக் கொண்டிருக் கிறது. விநாயகரின் திருஉருவம் ஓங்காரத்தை உணர்த்துகிறது. உலகிலுள்ள உயிர்கள் அழிந்தாலும் பிரணவ ஒலி அழிவதில்லை. அதுபோல் விநாயகரும் அழிவற்றராவார்.

### நீண்ட செவிகள்

கர்ம வினைகளால் ஏற்படும் துன்பங்கள், உயிர்களைத் தாக்காமல் பாதுகாத்து வினை வெப்பம் போக்கி அருள்கிறார். பெரிய செவிகள் உலகக் குறைகளைக் கேட்கவல்லவை என்பதை விளக்கும்.

### முக்கண்

சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றும் விநாயகரின் முக்கண்ணாக விளங்குகின்றன. இவை இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்றையும் குறிக்கும். அறிவைப் பெருக்குதல், வளர்த்தல், வதம் செய்தல் ஆகியவற்றின் மூலம் ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துகிறார்.

### கொம்பு

கொம்புகளைப் பதி ஞானம், பாச ஞானம் என்பர்.

### ஐந்து கரங்கள்

கும்பம் ஏந்திய கை ஆக்கும் தொழிலையும் மோதகம் ஏந்தியகை காத்தல் தொழிலையும் அங்குசம் ஏந்திய கை அழித்தல் தொழிலையும் பாசம் ஏந்திய கை மறைத்தல் தொழிலையும், தந்தம் ஏந்திய கை அருளல் தொழிலையும் புரிகின்றன இப்படியாக ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு அருள் புரிகின்றார் விநாயகர் என்பதைக் காட்டவே விநாயகருக்கு ஐந்து திருக்கைகள் அமைந்துள்ளன.

### வயிறு


உலகங்கள் அனைத்தையும் தம்முள் அடக்கி யிருப்பவர் என்பதை உணர்த்துகிறது.

### விநாயகருக்குப் பிடித்தமான பண்டங்கள்

மோதகம், அப்பம், அவல், பொரி, கடலை கரும்பு, மா, பிலா வாழைப்பழங்கள், நாவற் பழம் விளாங்கனி, தேங்காய், இளநீர், அவரை, துவரை சுண்டல், சுழியம் பிட்டு, பொங்கல், எள்ளுருண்டை வடை, பாயசம், தேன், கற்கண்டு, சர்க்கரை, தினை மாவு; பால், பாகு முதலியன.

### உகந்த மலர்கள்

அருகு, வன்னி இலை, மா இலை, வில்வ இலை. மலர்களில் மந்தாரைப்பூ, செம்பருத்தி ரோஜா, தாமரை, தும்பைப் பூ, சங்கு புஷ்பம் எருக்கம் பூ சிறப்பாகும். தாழம்பூ, துளசியினை பயன்படுத்தக் கூடாது.



விநாயகருக்கு உகந்த முக்கிய நாள் விநாயகர் சதுர்த்தி. இதை ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தி யன்று அனுஷ்டிக்கிறோம்.

**விநாயகரின் அவதாரங்கள்**

கஜானனர், விநாயகர், சிந்தாமணி, மயூரேசர் விக்கினேஸ்வரர், வக்ர துண்டர், கணபதி, பாலசந்திரர், மகோற்கடர், வல்லபை கணேசர், துண்டி விநாயகர் தூமகேது என்பர்.

**எங்கும் கணபதி**

விநாயகர் தமிழ் நாட்டுக்கு மட்டும் உரிய கடவுளல்லர், விநாயகர் வழிபாடு வெவ்வேறு பெயர் களில் - உருவங்களில், இந்தியத் துணைக் கண்டத்தி லும், சாவகம், பாலி, போர்னியோ, திபெத், பர்மா, சயாம், சீன, ஜப்பான், இந்தோ சீனா மற்றும் தமிழர் வாழும் அயல்நாடுகளில் எல்லாம் விநாயகருக்கு கோயில்களும் வழிபாடுகளும் உள்ளன.

எல்லோரா குகையில் உள்ள சித்திரங்களில் கணபதி உருவம் உள்ளது.

ஜபல்பூர் அருகில் உள்ள பீரோ கோட்டிலும், சுசீந்திரத்திலும் விநாயகர் பெண் வடிவில் உள்ளார். இது கஜானனி எனப்படும்.

கம்போடியாவில் நிற்கும் கணபதி வடிவம் உள்ளது. கூர்ஜரத்தில் குடைவரைக் கோயிலில் உள்ள கணபதியை ஜைனர்களும் வணங்குகின்றார் கள். சீனாவில் விநாயகருக்குப் பெயர் 'க்வான் ஷிடியிக்'. சப்பானில் 'வினாயக்ஷா', பர்மாவில் 'மகாபிணி' கம்போடியாவில் 'ப்ராகணேஷ்' என்றும் மங்கோலியாவில் 'தோத்கார் - அவுன் காகாள்' என்றும் வழங்கப்படுகிறது. ஜப்பானில் 'இடர்களையும் பிள்ளையார்' வழிபாட்டை 9ம் நூற்றாண்டில் தொடங்கியவர் 'கோபா தெய்சி'' என்பவராவார். சீனா வில் 'யானைமுகக் கடவுள்' திருவுருவம் வடிக்கப் பட்டது ஆறாவது நூற்றாண்டு ஆகும்.

விநாயகரை உள்ளன்புடன் வழிபடுவோர் நீண்ட ஆயுள், நிறைந்த செல்வம், நன்மக்கட்'பேறு, நோயற்ற வாழ்வு, நவநிதிப்பேறு, மன அமைதி முதலிய எல்லா நலன்களையும் அடைவார்கள்.

**தியான சுலோகம்**

சுக்லாம் பரதாம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத்சர்வ விக்னோப
சாந்தயே.

★★★

# தென் திசையில் பொங்கிய கங்கை

**- திருமதி மீனாட்சி கோகுலவாசன்**

பகீரதனால் பிரயத்தனப்பட்டு கொண்டுவரப் பட்ட கங்கை, பல இடங்களில் பலரின் வேண்டு கோளுக்கிணங்க வெளிப்பட்டுள்ளது. அப்படி வெளிப் பட்ட இடங்களில் ஒன்றுதான், நாம் இங்கு காணும், காணப்போகும், கங்கையின் மகத்துவம்....!

தஞ்சை மாவட்டத்தில், காவேரியின் வட கரையில், ஆடுதுறை செல்லும் பாதையில், திருவிச நல்லூர் கிராமத்தில், பல கோடி மக்களின் பிறவித் துன்பத்திலிருந்து உய்வித்துக் கொண்டு வரும் கங்கை, தெற்கில் சீறி எழுந்தாள்! காவேரிக் கரையில், ஒரு கிணற்றிலிருந்து பொங்கி வழிந்தாள்! அவள் பொங்கி எழுந்த கிணறு பொய் இல்லை.

கி.பி. 17-ம் நூற்றாண்டிலேயே, உண்மை யான பகுத்தறிவை, தனது செயலின் மூலம் நிறை வேற்றிக் காட்டிய உத்தமர்தான், ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள்!

இவர் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் சமஸ்தானத்தில், அமைச்சராகப் பணியாற்றி வந்த ஸ்ரீலிங்கயார்யா என்ற அந்தணப் பெருமகனாரின் புதல்வராகத் தோன்றியவர்.

ஒரு நாள்

அய்யாவாள் செய்ய வேண்டிய சிரார்த்தம் கார்த்திகை அமாவாசை அன்று வந்தது.

சிரார்த்தத்திற்குண்டான நியமப்படி எல்லாம் தயாராகி இருக்கிறது;

அது சமயம் அகிலாண்டேஸ்வரரின் அற்புத விளையாடல் ஒன்று அரங்கேறியது!

பல நாள் பசியால் துடித்து, மரண வேதனை யில் இருக்கும் ஒரு சண்டாளனையும் அவன் மனைவியையும் அய்யாவாள் கண்டார்.

அவர்களைக் கண்ட அய்யாவாளின் மனம் உருகியது; அன்னதானம் செய்வதைவிட சிறந்த தானம் ஏதுமில்லை என்பதை உணர்ந்த அய்யாவாள், சிறிதேனும் தயங்காமல், அவர்களுக்குத் தலை வாழை இலையைப் போட்டு, மனைவியை விட்டு உணவு பரிமாறச் சொன்னார். அவர்கள் சாப்பிடுவதைக் கண்டு ஆனந்தப்பரவசத்தில் மிதந்தார். தமது கரங்களினாலேயே தண்ணீரும் அளித்தார். அவர் களை சிவசக்தி ஸ்வரூபமாகவே தரிசனம் செய்து மகிழ்ந்து போனார் அய்யாவாள்!

வேத வேதாந்தம் படித்த, படிக்க மட்டுமே செய்த மற்ற அந்தணர்கள், அவர் செய்கையை குற்றம் சாட்டி, 'சிரார்த்த உணவை, சண்டாளனுக்கு அளிப்பதா? அதைப் பார்த்துக் கொண்டு நாம் மௌன மாக இருப்பதா?' என்று ஆர்ப்பரித்தார்கள். அந்தண கள் யாவரும் கூடி அய்யாவாளுக்கு சில நிபந்தனை களை விதித்தனர். அவையாவது அய்யாவாளின் சிரார்த்தத்திற்கு எந்த அந்தணனும் செல்லக்கூடாது சண்டாளனைத் தீண்டியதற்குப் பிராயச்சித்தமாக ஸ்ரீதர அய்யாவாள் கங்கைக்குச் சென்று நீராடி வ வேண்டும் என்றார்கள்.

'கங்கை சென்று நீராட வேண்டும்', என கூறக் கேட்ட அய்யாவாளின் மனம் பதைபதைத்தது கண்கள் பனித்தன. எதுவும் பதில் சொல்லாம தம் இல்லத்திற்குள் சென்று கதவைத் தாளிட்டு கொண்டார்.

வெளியில் நின்ற அந்தணர்கள்; எவர் உள்ளே செல்கிறார்கள்? எப்படி சிரார்த்தம் நடக்கிறது என்பதைப் பார்ப்போம் என்று முடிவு செய்து அய்யாவாளின் இல்லத்திற்கு முன் காவல் காத்தனர்.

உள்ளே....

சிரார்த்தம் தடைப்பட்டு விட்டதே கங்கைக்குச் செல்ல வேண்டுமே, என்று சிந்தித் படி, தாம் பூஜிக்கும் பகவானின் விக்கிரகங்கள் முன்னே அமர்ந்து அழுதுகொண்டிருந்தார் அய்யாவாள்...

நேரம் சென்று கொண்டிருந்தது...! திடீரெ அய்யாவாளின் இல்லத்தின் உள்ளே வேதமந்திர கள் ஒலித்தன; வெளியே நின்ற அந்தணர்கள் திகை தனர். எல்லோருக்கும் ஒரே வியப்பு...! அடுத் சில நிமிடங்களில் அவர்கள் கண்ட காட்சியா உடல் நடுக்கமுற்றனர்.

முன்பின் அறிமுகமில்லாத மூன்று அந்தண கள் அய்யாவாளின் இல்லத்திலிருந்து வெளியே வந் சென்று மறைந்தனர். சிரார்த்தம் நடந்து முடிந் விட்டதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கின அந்த வழியே சென்ற மூன்று அந்தணர்களு


சாட்சாத், 'பிரும்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகியோரே என்பதைப் பின்னர் அறிந்த அந்தணர் கள் வியப்புற்றுத் தங்கள் செயலுக்கு வருந்தினர்.

அடுத்து கங்கா ஸ்நானம்...! இதற்கு என்ன செய்வது என்று அய்யாவாள் தயங்கியபோது, அய்யா வாளின் பூஜை அறையிலிருந்து, ''உன் வீட்டுக் கிணற்றின் அருகில் நின்று 'கங்காஷ்டகம்' பாடு, கங்கை இங்கேயே பொங்கிவருவாள்'', என்று அசரீரிக்குரல் ஒன்று கேட்க அதன் படியே பாடினார்...!

ஆம்; அந்த கங்கையும் அய்யாவாளின் இல்லத்திலிருந்த கிணற்றில் பொங்க ஆரம்பித்தாள். கங்கை பொங்கினால் நாடே தாங்காது, கிராமம் தாங்குமோ! எல்லோரும் பயந்தனர்....! அந்த கங்கா மாதா கிராமத்திற்குள் தனது பிரவேசத்தை நடத்தி னாள்! பயந்து போன அனைவரும் அய்யா வாளைத் துன்புறுத்தியதால்தான் இது நிகழ்ந்தது எனக் கருதி அய்யாவாளின் பாத கமலங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். அந்தக் கருணா மூர்த்தியும் அவர்களை மன்னித்தருளினார்.

இன்றளவும் ஆண்டுதோறும் கார்த்திகை அமாவாசை அன்று அந்தக் கிணற்றில் கங்கா ஸ்நானம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அவர் வசித்து வந்த இல்லம் இப்போது 'ஸ்ரீ ஸ்ரீதர அய்யா வாள் மடம்', என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.

கார்த்திகை அமாவாசைக்குப் பத்து நாட் களுக்கு முன்னாலிருந்து, 'அய்யாவாள் உற்சவம்,





இங்கு வெகு விமரிசையாக நடந்து வருகிறது. அதனை ஒட்டி கார்த்திகை அமாவாசை அன்று பலபக்தர்கள் வந்து 'கங்கா ஸ்நானம்' செய்து, பெரும் பாக்கியத்தைப் பெறுகின்றனர்.

அச்சமயம் நாம சங்கீர்த்தனத்தால் செவிக்கு விருந்தும், அன்னதானத்தால் வயிற்றுக்கு விருந்தும் நடைபெறுகின்றன. அய்யாவாள் தம் வாழ்க்கையில் எண்ணற்ற அற்புதங்களை நிகழ்த்திக்காட்டியுள் ளார். அத்தனையும் அறிந்து உணர நமக்கு ஆயுள் போதாது.

இறைவனின் நாமத்தை ஜெபிப்பதிலேயே ஊறித்திளைத்து நாமரூபமாகவே மாறி கடைசியில், திருவிடைமருதூர் மகாலிங்கேஸ்வரருடனேயே இரண்டறக்கலந்துவிட்ட ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் வாழ்ந்த புனித பூமியில்... திருவிசநல்லூர் புண்ணிய மண்ணில், தெற்கில் பொங்கிய கங்கை யில் நாமும் ஒரு முறையேனும் சென்று, அங்கம் குளிர, புழுதிப்பட புரண்டு, மெய்சிலிர்க்க ஸ்நானம் செய்தாலேயே இப்பிறவியின் பிணிகள் அகலும்; இனி எப்பிறவியும் இல்லை என்ற நிலை பிறக்கும்!!

இப்படிப்பட்ட மகான்களின் வாழ்க்கையில் இருந்து, நாம் சிறிதேனும் கடைபிடிக்க முடிந்தால், நாமும் பிறவிப்பயனை அடைந்த மன நிறைவு ஏற்படும்.

வாழ்க ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளின் புகழ். வளர்க அவருடைய நாம சங்கீர்த்தனங்கள்...!!

★ ★ ★

# திருத்தணித் திருப்புகழ்த் திருவிழா

- திருப்புகழ் மாமணி, மு. அருணகிரி
(ஸ்ரீவள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளின் சீடர்) சென்னை - 600 012.

ஸ்ரீ அருணகிரியார், திருத்தணிக்குச் சென்று முருகனது பேரழகைக் கண்டு களித்து ''கோடாத வேதனுக்கு யான் செய்த குற்றம் என்ன? எனும் கேள்வியை விடுத்தார்.


திருப்புகழ் பாடும் அடியார்கள் இதே வினாவை தொடுக்காது இருக்கவும், அருணகிரியாருக்கு மனச் சாந்தி அளிக்கவும், முருகனே வருடாவருடம் டிசம்பர் 31-ம் தேதி அன்றும், மறு நாள் ஜனவரி - 1ம் தேதி அன்றும், அடியார்கள் யாவரையும் திருத்தணிக்கு அழைத்து தரிசனம் தரும் பொருட்டே ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ்ச் சச்சிதானந்த சுவாமிகளை மூல புருஷ ராகத் தோற்றுவித்து, திருப்புகழ் விழாவினுக்கு வித்திட திருவுள்ளம் கொண்டார் போலும் என நினைக்கத் தோன்றுகிறது.

பொதுவாகவே, எந்த ஒரு ஆலயமோ, இறைபணிகளோ, ஞானிகளாலும், சித்த புருஷர் களாலும் துவக்கி வைக்கப்படுமேயானால், நாளடை வில் நிச்சயம் விரிவடைந்து சிறப்புடன் விளங்கும் என்பதனை உணரச் செய்யும் ஒரு தனிச் சிறப்பு பாரத மண்ணுக்கே உரிய பண்பாகும்.

அதனடிப்படையிலேதான், எங்கள் குருநாதர் வள்ளிமலை சுவாமி சச்சிதானந்தா அவர்களே, 1921-ம் ஆண்டு தணிகை மணி, வ.சு.செ. பிள்ளை அவர்களோடு, மேலும் நெருங்கிய சில அடியார் களோடு, திருத்தணிக்குச் சென்று திருத்தணித் திருப் புகழ்த் திருவிழா எனும் தலைப்பினை தந்து முதன் முதலாக, துவங்க வித்திட்டவர் என்பதனை யாவரா லும் மறைக்கவோ, மாற்றவோ, மறுக்கவோ இய லாததொன்றாகும். இத்திருத்தணித் திருப்புகழ்த் திருவிழா அன்னாரது காலம் தொட்டு, இன்று வரை கோலாகலமாகப் பெருகி வருவதைக் காண முடிகிறது.

ஸ்ரீ அருணகிரி நாதரின் வாக்கிற்கிணங்க, திருமுருகன் பூண்டி தலத் திருப்புகழில்,

''அவசிய முனைவேண்டிப் - பலகாலும்
அறிவினுணர்ந் தாண்டுக் - கொரு நாளில்
தவசெப முந் தீண்டிக் - கனிவாகிச்
சரணமதும் பூண்டற் - கருள்வாயே;''



எனும் கருத்தினை மெய்ப்பிக்கும் பொருட்டே, ஆண்டுக்கு ஒரு நாள் திருத்தணி சென்று, திருப்புகழ் விழாவினை தொடர்ந்து நிகழ்த்தி வரும்படி எங்கள் குருநாதரால் உணர்த்தப்பட்ட ஒரு பணியாகும்.

ஏறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த தீர்க்கத் தரிசியான அருணகிரிப் பெருமான் முருகனிடம் அமிர்த கவி தொடை பாட அடிமை தனக்கு அருள வேண்டும் என விண்ணப்பித்ததன் பேரில், பாடிய பாடல்களே திருப்புகழ் போன்ற கவிகளாகும். அத்தகு பாடல்களில் ஒன்றான, .

''திருப்புகழோதும் கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் - பெருமாளே.''

எனும் பாடலில் பொதிந்துள்ள அற்புத அருள் வாக்கினை, வருங்காலத்தில் உலகிற்கு மெய்ப் பிக்கவே, திருத்தணிகேசனே அன்னாரது திருப்புகழ் பாடல்களை தன் கழுத்தில் மதாணியாய் அணிந்து கொண்டான் போலும். ஆதாரம், வேடிச்சி காவலன் வகுப்பில் ஒரு அடியில் இக்கருத்தினை புலப் படுத்தியது மிகவும் கவனிக்கத்தக்கது. அதனாலன்றோ, இவரை, ஆன்றோர்கள் ''வாக்கிற்கு அருணகிரி'' என புகழ்ந்துள்ளனர்.



விஞ்ஞானத்தால் முன்னேறி வரும் இக் கலியுகத்தில் ஆண்டுக்கொரு முறை திருத்தணி சென்று நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்து உருக, படிகள்தோறும் அடியார்கள் திருப்புகழ் பாடிச் சென்று, முருகப் பெருமானை தரிசித்து,

நின் தண்டையந்தாள் சூடும் - சென்னியையும், தொழுவதற்கு கையையும், உன் அழகை கண்டு களிக்க கண்களையும், உன் புகழையே பாடும் நாவையும் அடியார் பெருமக்களுக்கு அருள பிரார்த்திப்போமாக.

பொதுவாக நாட்டிலுள்ளோர், புது வருடத் தன்று மாலைகளும், பழங்களையும் கொண்டு சென்று, தங்களது உயர் அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்து வரும் நாளில் அதிகாரிகளின் அபி மானத்தை பெற நினைத்துச் செல்வதைக் கண்டு அதை விரும்பாத எங்கள் குருநாதர், எல்லோர்க்கும் மேலான துரையாகிய முருகனை ஆண்டின் தொடக்கத்தில் திருத்தணி சென்று 365 படிகளிலும் திருப்புகழ் பாடி, ஏழைகளுக்கும், அடியார்களுக் கும் தங்களால் இயன்ற தருமங்களைச் செய்து வாருங்கள் என்ற நெறியினை வகுத்துக் கொடுத்தார்.

''படிஉற்சவம்'' ''படிவிழா'' போன்றவை புகுத்தப்பட்ட போதிலும், குருநாதரால் வழங்கப் பட்ட ''திருத்தணித் திருப்புகழ் திருவிழா'' என்னும் தலைப்பினையே சிறிதும் மாற்றம் செய்யாது இன்று வரை அன்னாரது சீடர்களால் கொண்டாடி வருவது, குரு கட்டளையின் சிறப்பை அறிய முடிகிறது.

விண்ணோர்கள் வியக்கவும், மண்ணோரும் மதிக்கத் தக்க வகையில்,

"எத்திக்கும் உற்ற புகழ் வெற்றித் திருத்தணியில்
இன்றைத் தினத்தில் - வர வேணும்''
(முத்துத் தெறிக்க - திருப்புகழ்)

இது அருணகிரியாரின் அத்தாட்சிப் பத்திரம், புத்தாண்டு ஆரம்ப தினத்தன்று, முருகனடியார் கள் யாவரும் ஒன்று கூடி தணிகைக்குச் சென்று, முருகனிடம்,

''பலகாலும் உனைத் தொழுவோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ - அருள்வோனே''.

எனத் உள்ளத்தூய்மையுடன் கண்மலராலும், மன மலராலும், கைம்மலராலும் போற்றிப் பிரார்த்தித்து வாழுவது சிறப்புடையதாகும்.

முருகன் பால் உள்ளத்தையே உருக்க முயல் கின்ற ஆன்மீக சாதகர்கள், அருணகிரியாரின் அருள் வாக்கான திருப்புகழ் பாடல்களைப் பாடி வருவார் களேயானால், சீலம் வாய்ந்தவர்களால் புகழப் படும் சித்தர்களுள் பிரசித்தர்களாய் (சகல சித்திகளும் கைவரப் பெற்ற சித்தர்களாய்) விளங்குவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இக்கருத்தினை அருணகிரி யாரே, தாம் இயற்றிய சித்து வகுப்பில் கடைசி அடியில் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளது, அடியார் களின் உள்ளத்தை உருகச் செய்வதோடு, ஆன்மீக சமுதாயத்தை தட்டி எழுப்ப, சத்துள்ள ஔஷதமாக (டானிக்) அமைந்துள்ளது.

''வேலன் வாய்த்த திருப்புகழ் கற்றவர்
சீலமேத்திய சித்தப்ர சித்தரே''


என உறுதிப் பத்திரமாக அளித்துள்ளார்.

இத்திருத்தணித் திருப்புகழ்த் திருவிழா வானது மென்மேலும் புகழோடு சிறப்புடன் வருடா வருடம் குருநாதரால் தந்த தலைப்பிலேயே கொண் டாடி வர, பக்தியால் தணிகை முருகனை பலகாலும் பற்றியே மாத்திருப்புகழ் பாடல்களைப் படிகள் தோறும் பாடி, வருவினைகள் தீர்ப்போமாக.

★★★

# தொண்டனுக்குத் தொண்டனான தேவாதி தேவன்

- திருமதி உமா சுப்பிரமணியன்



ஜகத்தைக் காக்கின்ற
சங்கரனே போற்றி
நித்தம் வணங்குகின்றேன்
உன் பதத்தைப் பற்றி (ஜகத்தைக்)

சிரசிலும் கழுத்திலும்
சீறுகின்ற நாகம்
சிங்கார அன்னை
உன்னில் சரிபாகம்
அள்ளி முடித்த குழலில்
அம்புலியே மலராக
சொல்லி முடியாது
சொக்கனே உன்னழகு (ஜகத்தைக்)

எண்ணி முடியாது உன் திருவிளையாடல்
இயற்றினேன் உன்னால் சிறுபாடல்
ஆயகலைகள் உன் படைப்பு
அவையாவிலும் நீயிருப்பு

பாடித் தொழுத பக்தருண்டு
ஆடித் தொழுத அன்பருண்டு
அடியார்க்கு அருள் செய்யும் ஆண்டவனே
கைலாய நாதனே கங்கை மணாளனே! (ஜகத்தைக்)

சுடலைத் தலைவனே சுந்தரனே
உடலைப் பிரிந்தபின் உன்னைச்சேர
கடும் தவங்கள் வேண்டாம்
பலன் கருதா பக்தி போதும்

கண்ணப்பன் காட்டிய அன்பையே
களிப்போடு ஏற்ற தந்தையே
பிட்டுக்கு மண் சுமந்தது விந்தையே
விறகு வெட்டியாக வந்தாய் அடக்கினாய்
அகந்தையை (ஜகத்தைக்)

அடியார் உருவில் இல்லம் வந்து
அடியார் அல்லல் உடன் கலைந்து
நாயன்மார் வாழ்வினிலே
நம்பியோர்க்குநீ நலன் புரிந்தாய்

உன்னை நினைந்து நீறணிந்தால்
வினை என்னைச் சேர்வதில்லை
எண்ண மெல்லாம் நியே ஆனதால்
என் மனத்தினில் என்றும் சோர்வில்லை.
(ஜகத்தைக்)

***

# காஞ்சி குமர கோட்டம்

**- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்**

சிவகாஞ்சி பகுதியில் அம்மையும் அப்பனும் இருபுறமும், காம கோட்டத்திலும் (ஸ்ரீ காஞ்சி காமாட்சி), ஏகம்பரத்திலும் (ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர்) தனிக்கோயில்களில் எழுந்தருளியிருக்க, நடுவில் அறிவுச் செல்வன் பிரணவ நாதன் திருமுருகன் குமரகோட்டத்தில், காஞ்சி சங்கர மடத்திற்கு அருகில், ராஜவீதியில் எழுந்தருளி சோமாஸ்கந்த ரூபத்தின் சிறப்பை எடுத்துக் காட்டுவது, இந்த திருத்தலத்தில்தான்.

ஓங்கு திரு வேகம்பம் ஓர்புறத்தே நின்றொளிரப்
பாங்கினிலே காம கோட்டம் அமையத் - தேங்கு
புகழ்க்
கோமான் குமரன்தன் கோட்டம் நடுவிருக்கும்
சோமாஸ்கந்தன் ரூபம் சொல்.

தலபுராணம்

இத்தகைய தனித்தனிக் கோயிலாக உள்ள அரிய அமைப்பு வேறெங்கும் இல்லை. படைப்புக் கடவுளின் தொழிலை மேற்கொண்டுள்ள நிலையில் காட்சி தரும் இத்தலத்து சுப்பிரமணிய சுவாமி கருணையே உருவானவர். உருகும் உள்ளம் கொண்டவர். பக்தர்களுக்கு அருள் புரிந்து அவர்களை தன் அடிகொண்டவர். அடியார்களை அழைத்து அணைத்துக் கொண்டவர். அனைத்து நலன்களையும் அளிக்கும் அருள் கொண்டவர். இத்திருக்கோவிலில் பணிபுரிந்து வந்த கச்சியப்ப சிவாச்சாரியாரைக் கொண்டு தனக்குத் தனித்தமிழில் கந்தபுராணம் செய்து கொண்டவர். அருணகிரிநாதர், மாதவச் சிவஞான முனிவர், பாம்பன் சுவாமிகள் மற்றும் பலரது பாடல்களையும் கொண்டவர்.

நாடி முருகனை நாம் அழைக்க நல்லுணர்வால்
ஓடிவருவான் உமை மைந்தன் முருகன்!
பாடி முருகனைப் பரவசத்தில் ஆழ்த்திவிட்டால்
ஆடி வருவான் அழகுமயில் வாகனன் முருகன்!


உள்ளமெனும் கோயிலிலே உறைகின்ற முருகன், இத்திருத்தலத்தில் தானே ''திகடசக்கரம்'' என அடி எடுத்துக் கொடுத்து, கச்சியப்ப சிவாச்சாரியாரை கந்தபுராணம் பாடச் செய்து, தன் திருக்கோயிலிலேயே அரங்கேற்றச் செய்து, அரங்கேற்றத்தில் ஏற்பட்ட தடையையும், நீக்கியருளினார். இத்தகைய சிறப்பு உடையது குமர கோட்டம். ஏறத்தாழ 900 ஆண்டுகளாக உள்ள இத்திருக்கோயில் முருகன் அடியார்களுக்கு அருளுகின்ற ஒப்பற்றத் தலமாகும். இறைவன் முருகனே அடி எடுத்துக் கொடுத்ததால் இத்தலமே முருக பக்தர்களுக்கு மனதில் முதலில் நிற்கும் சிறந்த குமரகோட்டமாகத் திகழ்கிறது.

'உலகெலாம்' என இறைவன் அடி எடுத்துக் கொடுக்க, சேக்கிழார் தொடுத்த பெரிய புராணம் அரங்கேறிய தில்லை, ''சிதம்பரம்'' எப்படி சிவபக்தர்களுக்குச் சிறந்த கோயிலாக இருக்கிறதோ, ''உலகம் யாவையும்'' என்று தொடங்கும் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட திருவரங்கம் வைணவர்களுக்கு சிறந்த ஆலயமாக இருக்கிறதோ, அதுபோல் முருக பக்தர்களுக்கு இக்குமர கோட்டம் சிறந்த கோட்டமாக இருக்கிறது.

திருப்புகழில் அருணகிரிநாதர் இத்திருத்தலத்தைப் பாடினார். இவ்வாலயம் இருக்குமிடமறியாது திரும்பிச் சென்று கொண்டிருந்த பாம்பன் சுவாமிகளை சிறுவனாக வந்து வழிகாட்டி அழைத்து வந்து தரிசனம் செய்வித்து பாடலும் கொண்டவன் இத்தலத்து முருகப் பெருமான்.

இக்குமரக் கோட்டத்தில் வசிக்கும் பக்தர்களை, இக்கோட்டத்து முருகனை வந்து வணங்கும் பக்தர்களை, இம்முருகனை வந்து வணங்கி நினைவில் ஏந்தி நிற்கும் பக்தர்களை, ஒருமுறையேனும் முருகா என்று மனமுருகிக் கூப்பிட்டுக் கும்பிடும் ஒவ்வொருவரையும், ஏன் கூப்பிடப்போகும் ஒவ்வொருவரையும் உள்ளத்தாலும், உடலாலும், அருளாலும், பொருளாலும் வாட்டம் இன்றி வைக்கிறான் திருமுருகன். எனவே முருகன் அடியார்களுக்கு, கோயில் என்றால் அது இக் குமரகோட்டமே என்றால் மிகையாகாது.

இத்தகைய பெருமையும், சிறப்பும் வாய்ந்த எழில்மிக்க இத்திருக்கோயில், காஞ்சி மாநகரத்தில் நகரின் நடுவில், மேற்கு இராஜவீதியில் அமைந்



துள்ளது. பக்தி தரும், நல்புத்தி தரும், சக்தி தரும் நல் முக்தி தரும் முக்கிய நகரமான காஞ்சியை உலக உயிர்களின் பிறவிப்பிணியை மாற்றி முக்திதரவல்ல சிறப்புடையனவாகக் கூறப்படும் ஏழு தலங்களுள் ஒன்றாக ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள். சப்த மோக்ஷபுரி (முக்தி தரக்கூடிய நகரம்) களாவன, அயோத்தி, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை. இவற்றுள் காஞ்சி மட்டுமே தென்னாட்டில் தொண்டை நாட்டில் இருக்கிறது. நகரேசு காஞ்சி (நகரங்களில் சிறந்தது) என கவி காளிதாசராலும், முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி (காஞ்சி) என்று வேதாந்த தேசிகராலும் போற்றப் பட்டது இந்நகரம்.

காஞ்சிபுரம் பல மடங்களும், கோயில்களும் நிறைந்துள்ள ஒரு கோயில் நகரமாகும்.

சிவபெருமான் கொண்டருளுகின்ற மூர்த்தங்களுள் சோமாஸ்கந்த வடிவம் என்பதும் ஒன்று. அவ்வடிவம் சிவபெருமானுக்கு இடப்புறத்தே உமாதேவியார் அமர்ந்திருக்க, இடையில் குமரக் கடவுள் வீற்றிருப்பது ஆகும். இத்தகைய சோமாஸ்கந்த (சக உமாஸ்கந்த) (ஸ்கந்த - முருகன்) வடிவத்தில் காஞ்சி குமரகோட்டம் அமைந்திருப்பது, இக் கோயில், அம்மையப்பன் திருக்கோயில்களுக்கு இடையில் அமைந்திருப்பது, காஞ்சி காமகோடி மடத்திற்கு அருகாமையில் அமைந்திருப்பது இப்படி பல சிறப்புக்கள் இவ்வாலய அமைவிடத்திற்கு உண்டு.

(மேற்கு) இராஜவீதியில் கச்சபேசர் திருக் கோயில். கங்கை கொண்டாள் மண்டபம் இவைகளுக்கு மத்தியில் திரு காமகோட்டத்திற்கு (காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கு) மேற்கில் மகா காளேசத்திற்கு அருகில், ஆதிபீடா பரமேஸ்வரி காளிகாம்பாள் கோயிலின் தெற்கில், இக்குமர கோட்டம் அமைந்துள்ளது. அருள்மிகு சுப்பிரமணிய சாமி மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கின்றார்.

ஒரு நாள், திருக்கயிலை மலையிலிருந்து சிவபார்வதியை வழிபட்டுவிட்டு, பிரம்ம தேவர் இந்திராதி தேவர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவ்வமயம் முதற் கோபுர வாயிலில் இருந்த முருகனை இந்திராதி தேவர்கள் வணங்கிவிட்டுச் சென்றுகொண்டிருந்தனர். ஆனால் பிரம்மனோ மிகவும் அகந்தையோடு ''நாம் இவரை வணங்க வேண்டுமா'' என்று இருந்துவிட்டார்.

முருகன் அச்சமூட்டும் குரலுடன் பிரம்மனை நோக்கி ''நீயார்? உன் தொழில் என்ன?'' என்று கேட்க, அவரும் பயந்துகொண்டே, சிவபிரானின் ஆணையினால் படைக்கும் தொழிலைச் செய்கிறேன் என்று கூறினார். உனக்கு வேதம் வருமா என்று முருகன் பிரமனைக் கேட்க, பிரமனும் சிவபிரான் அருளிச்

செய்த சிலவற்றை அவரே உபதேசிக்க, அவற்றை நான் உணர்வேன் என்று கூறிவிட்டார்.

வேதம் தெரியுமெனில் முதல் வேதமாகிய ரிக் வேதத்தைச் சொல் என்றார். வேதத்தை அறிந்திருந்த நான்முகனால் உணர முடியவில்லை. ஓம் எனும் பிரணவ மந்திரத்தை முதலில் சொல்லி பிரமனும் வேதத்தைச் சொல்லத் தொடங்கினான். முருகன் புன்னகைப் பூத்துக்கொண்டே பிரமனே நில்! நீ முதலில் சொல்லுகின்ற 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் பொருள் யாது என்று கேட்டார். பிரம தேவனோ பொருள் தெரியாமல் விழித்தனன். பிரம தேவன் பொருள் தெரியாது மயங்குவது கண்டு, பிரணவத்தின் பொருள் கூட அறியாது, உணராது, நீ என்ன படைப்புத் தொழிலை செய்கிறாய் என்று கூறி பிரமனைச் சிறையிலிட்டுவிட்டு தானே அத் தொழிலை செய்ய மேற்கொண்டார்.

ஒருக ரந்தனில் கண்டிகை வடம்பரித் தொருதன்
கரத லந்தனில் குண்டிகை தரித்திரு கரங்கள்
வரத மோடப யந்தரப் பரம்பொருள் மகன்ஓர்
திருமு கங்கொடு சதுர்முகன் போல்விதி செய்தான்

என்று கந்த புராணம் திருமுருகன் தன் ஒரு முகத்தால் நான் முகனின் தொழிலை செய்தனன் என்ற செய்தி யினைக் கூறுகிறது. சிறையிடப்பட்ட பிரமனை தேவர் கள் விடுவிக்கக் கோரியதன் பேரில் நமச்சிவாயம் விடுவிக்கச் செய்தார். அதுபோது எல்லாக் கலை களுக்கும் முதல்வனாகிய சதாசிவத்தை வேதங்கள் சதாசிவம் என்று பிரணவ சப்தத்தில் ஒருமுறை அழைக்கின்றது. ஆனால் குமரக் கடவுளை சுப்ர மணியம், சுப்ரமணியம், சுப்ரமணியம் என்று மும் முறை பிரணவத்தை இணைத்துக் கூவியழைக் கிறது. இது அறியாது பிரமன் கர்வம் கொண்டது தவறு என்றும் சிவபெருமான் கூறினார்.

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்
பிரமனுக்கும் ஈசன் என்னத்
தக்கமுதல் பரப்பிரம்மம் சதாசிவன் ஓம்''
என வேதம் சாற்றும் அல்லால்
முக்கனல் சூழ் வேள்விற் சுப்பிரமணியன்
ஓம் எனவும் முக்கால் கூறும்
இக்கருத்தை அறியானை எவ்வாறு
விடுவிப்ப தியம்பு மின்னோ?''

(காஞ்சி புராணம்)

சிவபெருமான் நந்திதேவரை முருகனிடம் அனுப்பி வேண்டியும், விடுவிக்காததால், தானே திரு முருகனை நாடி வந்தார். அவரும் விடுவித்தார், ஆனால் ஆறுமுகனிடம் அதன் பொருள் உனக்குத் தெரியுமா? என வினவ, அறிவேன் என்றார் முருகன். முன்னொருகால் சிவபெருமான் உமா தேவிக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசித்தபோது உட னிருந்து கேட்டறிந்திருந்தார். பரமனின் திருச்செவி யில் யாரும் அறியாதவாறு உரைத்தருளினார். இருப்பினும் சிவபெருமான் முருகனை நோக்கி தமது ஆணையை நீ மீறியதால் உண்டான குற்றம் நீங்கக் கழுவாய் (பிராயச்சித்தம்) செய்தல் வேண்டும். அதனால் கொடிய வஞ்சனைகள் நெருங்காமைக்கு இடமாகிய திருக்காஞ்சியை அடைந்து, அங்கே தேவ சேனாபதீசம் என உன் பெயரால் சிவலிங்கம் நிறுவி வழிபடுக! என்று அருளிச் செய்தனர். குமரனும் அதை யேற்று அவரைத் தொழுது வணங்கி விடைபெற்றுக் காஞ்சியம்பதி வந்து, தம் பெயரால் தேவசேனா பதீசம் நிறுவி வழிபடலானார்.

குமரன் இத்திருத்தலத்தில் படைப்புத் தொழிலை மேற்கொண்டிருந்த காலத்தில் இருந்த திருக்கோலத்தில் பிரம்மசாரியாகக் காட்சியளிக் கிறார். ஒரு திருமுகம், நான்கு திருக்கரங்கள் கொண்டு நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். உயர்த்திய வலக் கரத்தில் உருத்திராட்ச மாலையும், அதற்கு இணை யான இடக்கரத்தில் கமண்டலமும் இருக்கிறது. மற்றொரு வலக்கரம் அபயவரத ஹஸ்தமாகவும், இடக்கரம் தொடையின் மேல் ஊன்றிய நிலை யிலும் உள்ளது.

அபய ஹஸ்தம் என்றால் அடைந்தோரைக் காப்பது என்று பொருள். முருகப்பெருமான் தன்னைச் சரணடைந்தோரை தனது திருக்கரத்தால் கை கொடுத்துத் தூக்கி, காத்து வருகின்றவராயிற்றே!

வள்ளி நாயகியாரைத் தழுவும் போக மூர்த்தி யாகிய முருகப்பெருமான் இத்திருத்தலத்தில் மான் தோல் உடுத்து, தருப்பையாலான அரைஞாண் அணிந்து, பிரமதேவர் போலக் குண்டிகையும் வடமும் தாங்கிய பிரமச் சாரியாக உள்ளது இக்கோலம் என்று காஞ்சிபுராணம் வருணிக்கின்றது. இத்திருக் கோயிலில் வள்ளி தெய்வானையரின் மூலவர் திரு உருவங்கள் இல்லை. சுற்றுப் பிரகாரத்தில் இவ்விரு வரும் தனித்தனியே செப்புப் படிமங்களாகக் காட்சி யளித்து அருளுகின்றனர். முருகப் பெருமான் தனி மூர்த்தமாக இருப்பது இத்தலத்தின் சிறப்பு அம்ச மாகும். மூல மூர்த்தி சுப்பிரமணிய சுவாமிக்கு எதிரே வலப்புறத்தில் கிழக்கு நோக்கிய சந்நிதியில் தேவ சேனாபதீசர் சிவலிங்கத் திருமேனியில் திகழ்கின் றார். இத்திருமேனியே முருகப்பெருமான் ஸ்தாபித்து வழிபட்டதாகும். இக்கோயிலின் நுழைவாயிலில் தேவ சேனாபதி முருகன் ஈசுவரனை வணங்கி வழிபட்ட

காட்சி மிகவும் அழகாகச் சுதையினால் அமைக்கப் பட்டுள்ளது. இச்சந்நிதியின் எதிரில் தெற்கு நோக்கி சுமித்திரேசர் அமர்ந்துள்ளார்.

''ஈறுசேர் பொழுதினும் இறுதி இன்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சி

என்று கந்தபுராணப் பாடல் ஊழிக்காலத்தும், கடல் நீரால் அழியாது திருக்காஞ்சி வந்து காக்கப்பட்ட மார்க்கண்டேயர் திருவேகம்பப் பெருமானை வழி பட்டதைக் கூறுகிறது. உலகப் பொருள்கள் அனைத் தையும் உட்கொண்ட திருமாலும் காஞ்சிக்கு வந்து திருவேகம்பரை வணங்கினார். மார்க்கண்டேயர் உரைத்ததை எண்ணி மாயையை வெல்லும் பொருட்டு, திருக்காமகோட்டம் அடைந்து அம்பிகையை வழிபட்டு பிறகு தேவசேனாதிபதீசு வரரை வணங்கினார்.

நின்னடியில் மாறாத அன்பும், அடியவரிடம் வஞ்சனை எண்ணா மனமும் உமது புதல்வருடன் சந்நிதியில் இருக்கும் பேறும் வேண்டும் என இறை வனை வேண்டினார். பெருமான் அனைத்துந் தந் தருளி உருகும் உள்ளத்தான் என்னும் திருப்பெயர் பெறுக என்று கூறித் திருவுருக்கரந்தனர். அதுமுதல் உருகுள்ள பெருமான் என்ற திருநாமத்தோடு தேவ சேனாபதீசத்தின் எதிரே வடக்கில் தெற்கு நோக்கிய சந்நிதியில் காட்சி தருகின்றார் பெருமாள்.

குமரனை வழிபடக் கோட்டத்துள் நுழைந்த தும் எதிரே இருப்பது கச்சியப்பர் அரங்கேற்றிய கந்த புராண மண்டபம்.

சைவத் திருமரபில் தோன்றிய காளத்தியப்ப சிவாச்சாரியாரின் திருமகன் கச்சியப்ப சிவாச்சாரி யார். தினந்தோறும் பெருமானைப் பூசை செய்யும் பாக்கியம் பெற்ற இவரை ஒருநாள் தன் வரலாறு பாடச் சொல்லி முருகன் கனவில் சொல்லியிருக் கிறார். கச்சியப்பரோ அடியேன் எப்படிப் பாடுவேன் என யோசிக்க முருகனும் 'திகடசக்கரச் செம்முகம்' என முதலடி எடுத்துக் கொடுத்துப் பாடுமாறு அருளி மறைந்திருக்கிறார். கனவில் பெற்ற கட்டளை ஏற்று கந்தனின் புராணத்தைப் பாடத் தொடங்கினார். தினமும் எழுதிய நூறு பாடல்களையும் அவன் திருவடியில் இரவு நடை சாற்றும்போது வைத்து விட்டு வந்தால் அடுத்த நாள் காலை நடை திறக்கும்போது அப்பாடல்கள் திருத்தப்பெற்று இருக்கும். இவ் வாறு சரித நாயகனே சரிபார்த்த காவியம் கந்த புராணம் ஆகும்.

அரங்கேற்றும் சமயம் நூலாசிரியர் அர்த்தத் துடன் சொல்லி அரங்கேற்ற முனைந்தார். ''திகட சக்கர செம்முகம்'' என்ற தொடரை திகழ் தசம் கரம் என்று பிரித்து விளக்கம் கூறியபோது, அவையில் இருந்த புலவர்களில் ஒருவர் அத்தொடரை அவ்வாறு பிரிக்க இலக்கணம் இடம் தரவில்லை என்று மறுப்புக் கூறினார். இது முருகனே கொடுத்த தொடர், இதற்கு விளக்கம் நாளைக்குக் கிடைக்கும் என்று கூறி கச்சியப்பர் அமர்ந்து விட்டார். அவை கலைந்தது. மனவருத்தத்தில் இருந்த கச்சியப்பரிடம் முருகன் மறுநாள் அரங்கேற்றம் நடத்தச் சொல்லி, அது சமயம் தடை நீங்கும் என்று கனவில் கூறி மறைந்தார்.

மறுநாள் அவையில் கேள்வி எழுப்பிய அந்த புலவருக்கு வேறு ஒரு புலவர் எழுந்து வீரசோழியம் என்னும் இலக்கண நூலையும் அதில் சந்திப் படலத் தில் உள்ள நூற்பாவையும் காட்டி, ''என்ன புலவரே! ஐயம் தீர்ந்ததா? என வினவினார். கேட்டவர் வாய் திறவாதிருக்க விளக்கம் கூறிவந்த முருகப் பெருமான் மறைந்தருளினார். இப்படி முருகனின் திருவிளை யாடலோடு ஆரம்பித்த அரங்கேற்றம் தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்று இனிதே முடிந்தது.

இந்நிகழ்ச்சியைப் பிற்காலத்தில் வந்த அருண கிரியார் தம் திருப்புகழில்,

''மருவு புலவனார் கவிக்குளேசிறு
வழுவ தறைமகா சபைக்குளேகிய
மருவு இலக்கணாவிதி மொழிவோனே''

எனவும்,

முற்பட்ட இலக்கண நூலிடை
தப்புற்றகவிக்கென வேஅவை
முற்பட்டு புதுத்துறை மாறிய புலவோனே''

எனவும் பாடியுள்ளார்.

கந்த புராணம் அரங்கேறிய இந்த மண்டபத் தில் தற்போது கச்சியப்பர் நூலகம் என்ற சமய நூல் நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

கந்தனின் அருள்பெற்ற கச்சியப்பரின் திரு மேனி, தேவசேனா பதிசப் பெருமான் திருச்சுற்றில் மேற்கு நோக்கி அமர்ந்த நிலையில் உள்ளது. இவரது காலம் கி.பி 11ஆம் நூற்றாண்டு என்பர்.

தேவசேனா பதிசப் பெருமான் திருக்கோயிலின் திருச்சுற்றில் தென்பால் தெற்கு நோக்கிய விநாயகர்



ஒருவர் உள்ளார். ஆலயத்தில் செய்யப்படும் நிவேதனங்கள் முதலில் இவருக்கே நிவேதிக்கப்படும். வேழ முகத்து விநாயகரைத் தொழ வினைகள் நீங்கும், வெற்றிகள் பொங்குமன்றோ?

ஆறுமுகப் பெருமானின் சந்நிதி கச்சியப்பருக்கு வடபாலும், தண்டபாணி சந்நிதியின் இடபாலும் .ர்சவ மூர்த்தியாக திருவாசியுடன் காட்சி தருகிறார். அவரது திருமுன்னே வள்ளி தெய்வானையர் நின்ற திருக்கோலத்தில் உள்ளனர். இதை அடுத்து உள்ளது யாகசாலை.

அடுத்து வைரவர் சந்நிதி உள்ளது. அங்கே ஒருவர் உக்கரவர் ஆகவும் மற்றொருவர் சாந்தஸ்வரூபமாகவும் காட்சியளிக்கிறார். அடுத்து பள்ளியறையும், அதனை அடுத்து உருகுமுள்ளப் பெருமான் சந்நிதியும் உள்ளது. உருகுமுள்ளப் பெருமான் சந்நிதியில் வைணவ முறைப்படி பூசைகள் நடத்தப் படுகின்றன.

அடுத்து சோமாஸ்கந்தர், நவவீரர்கள், முத்துக் குமார சுவாமி, கஜவல்லி ஆகியோரது உற்சவத் திருமேனிகள் அமைந்த தனித்தனி தெற்கு நோக்கிய சந்நிதிகள் உள்ளன.

பிரகாரத்தின் கீழ்ப்பகுதியில் வடகோடியில் வள்ளியம்மையாகும், தென்கோடியில் தெய்வயானையும் மேற்கு நோக்கிய சந்நிதிகளில் உள்ளனர். இவர்களுக்கு இடையில், தட்சிணாமூர்த்தி, திருமால், நாகலிங்கம், நவவீரர்கள், நவக்கிரக சந்நிதிகள் அமைந்து உள்ளன.

தெய்வானையாருக்கு அடுத்து அருணகிரியார் சந்நிதி. அவர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். முருகப் பெருமானின் திருப்புகழைப் பாடியவராயிற்றே. அரிசி இல்லாமல் திருமணமா? அருணகிரியார் இல்லாத முருகன் திருக்கோயிலா? இக்குமர கோட்டத்து முருகனை அருணகிரியார் பாடுகையில்,

குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று<br>குருவி யோட்டித் திரிந்த தவமானை<br>குமைதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்த<br>குமரகோட்டத் தமர்ந்த பெருமாளே

என்று பாடியுள்ளார். திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்குமே! அருணகிரிநாதர் சந்நிதிக்கு அடுத்து உள்ளது திருமடைப்பள்ளியும் தியான மண்டபமும்.

இங்கு தியான மண்டபத்தில் பக்தர்கள் அமர்ந்து நன்றாக தியானம் செய்கிறார்கள்.

அனைவரும் காஞ்சிஸ்ரீகுமரகோட்டம் சென்று வழிபட்டு இகபரசுகம் பெற்று இன்புற்று வாழ அன்புடன் வேண்டுகிறேன்.

★★★

# திருக்குறளும் திருமுறைகளும்

– டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக்கழகம்

வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார் ஓத என்று சங்க காலத்துப் புலவர்கள் பலர் பாராட்டுவதற்கு ஏற்ப குறள் என்னும் பாவகையால் ஆன நூல் தெய்வீக வேதப்பொருளைப் பேசுவதால் திருக்குறள் என்று புகழப்பட்டது. தெய்வத் தமிழ்ச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுச் சங்க நூலாகப் புகழ்பெற்றது. வள்ளுவர் திருவள்ளுவர் என்றும் திருவள்ளுவ நாயனார் என்றும் புகழ்பெற்றார்.

விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானை

எனப் பரம்பொருளை நேரில் கண்டு பேரின்பம் பெற்ற அருளாசிரியர் அருளிச் செய்த தேவாரம், திருவாசகம் போன்ற தெய்வத் தமிழிசைக் களஞ்சியங்களில் காணப்படும் உயர்ந்த, ஆழ்ந்த, சிறந்த வேதாகம தெய்வத் தத்துவ அனுபவ உண்மைகளும் நன்னெறிகளுமே திருக்குறளிலும் கூறப்பட்டுள்ளன. திருக்குறளின் முதல் குறளே பழம்பெரும் சைவ சித்தாந்தப் பேருண்மையைப் புலப்படுத்துகின்றது. ஆகம நூலாகிய அதாவது சித்தாந்த நூலாகிய திருமந்திரத்தில் காணப்படும் தலைப்புகளே, கருத்துகளே திருக்குறளிலும் அதிகாரத் தலைப்புகளாக அமைந்து விளக்கப்பட்டுள்ளன. திருமந்திரத்தில் வலியுறுத்தப்படும் வான் சிறப்பு, கல்வி, கேள்வி, தவம், ஊழ், ஞானம், துறவு, அன்புடைமை, பொறையுடைமை, நடுவுநிலைமை, பெரியாரைத் துணைக்கோடல், கொல்லாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், கல்லாமை, பிறன்மனை நயவாமை, நிலையாமை (இளமை, செல்வம், யாக்கை), அறன் செய்தல், ஒழுக்கம் உடைமை, நல்குரவு, தானச்சிறப்பு (ஈகை) அரசாட்சிமுறை போன்றவையே திருக்குறளிலும் அதிகாரத் தலைப்புகளாக அமைந்து விளக்கப்படுகின்றன.

அவன், அவள், அது என்னும் மூவகை இனங்களைக் கொண்டு தோன்றி, இருந்து, ஒடுங்கும் தன்மையடைய உலகமானது பரமனை ஆதியாக முதலாகக் கொண்டுள்ளது என்பதை

அவன் அவள் அது எனும் மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்

என்று சிவஞானபோதம் செப்புகின்றது. உலகம் எல்லாம் சிவனிடமிருந்து தோன்றுகின்றன என்பதை

நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள்
நிழல் கீழ்
மூவகை உலகு முகிழ்த்தன முறையே

என்று மகாபாரதம் பாடிய சங்கப்புலவர் பெருந்தேவனார் தெளிவு படுத்தியுள்ளார். எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருப்பது போல் உலகங்கள் எல்லாம் பரமசிவனை முதலாகக் கொண்டுள்ளன. இதனால் பரமேசுவரனுக்கு அகரமுதலான், அண்ட முதல்வன், ஆதிமூர்த்தி, ஆதிபகவன் என்றெல்லாம் திருப்பெயர்கள் அமைந்தன. அகர எழுத்தைப் போல அரன் உலகுக்கு முதலாக இருப்பதை

அகர முதலின் எழுத்தாகி நின்றாய்
அகர முதலானை அணி ஆப்பனூரானை
தொல் உலகுக்கு ஆதியாய் நின்ற அரசன்
அண்டம் முதல் ஆயினான்
அண்டர் தமக்கு ஆகம நூல் மொழியும் ஆதியை

என்று திருமுறைகள் தெரிவிக்கின்றன. பரமசிவன் யாவற்றுக்கும் முதல்வனாக ஆதிபகவனாக அமைவதை

ஆதிமூர்த்தியை அருந்தவ முதல்வனை

என்று சங்கப்புலவர் நக்கீரரும் போற்றுகிறார். எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருப்பது போல உலகங்கள் பரமசிவனை முதலாகக் கொண்டிருப்பதைப் பலரும் போற்றுவது போன்றே திருவள்ளுவரும் எடுத்த எடுப்பிலேயே

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு என்று போற்றினார். மெய்கண்ட சாத்திரமான சிவஞான போதத்தின் முதல் பாடல் கூறும் உண்மையே திருக்குறளிலும் முதல் குறளாக அமைந்துள்ளது. இவ்வாறு சைவசித்தாந்த உண்மையை முதலாகக் கொண்டுள்ள திருக்குறளோடு ஒத்த காலத்த நூலான புறநானூறும் சிவபெருமான் முதல்வனாக, ஆதிபகவனாக இருப்பதை

நன்றாய்ந்த நீள் நிமிர்சடை முதுமுதல்வன்

என்று வாழ்த்துகின்றது. இவ்வாறு பரமசிவன் ஆதி பகவன் உலக முதல்வனாய் விளங்கும் ஒருவன் என்று எல்லோராலும் போற்றி வழிபடப்படுவதை

ஒருவன் என ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன்

என்று நம்மாழ்வாரும் வாயார வாழ்த்துகின்றார்.

பிறப்பு இல்லாதவனே கடவுள். பிறப்பு உள்ளவை ஜீவராசிகள். பிறவியில்லாத பரமனால் மட்டுமே பிறவா நிலையை அருள முடியும். எனவே பிறவிக்கடலை நீந்திப் பிறவா நிலையைச் சேர வேண்டும் என்றால் செம்பொருளாம் பரமசிவனுடைய திருவடிகளை வணங்கவேண்டும். அதை விடுத்து பிறவியில் சிக்குண்டு பிறந்து வருகின்ற தேவ தேவியரையெல்லாம், நம்மைப்போன்ற மனிதப் பிறவிகளெல்லாம் வழிபட்டால் பிறவிக்கடலை நீந்த முடியாது. மீண்டும் மீண்டும் பிறந்துதான் வர வேண்டுமே தவிர பிறவா நிலைமை அடைய முடியாது.

செம்பொருள் துணிவே சீருடைக் கழலே
பேணும் அடியார் பிறப்புஅகலக் காணும்
பெரியானை
அங்கண் அந்தணனாய் அறைகூவி வீடு
அருளும் அருங்கருணை வார்கழல்
பிறவி என்னும் இக்கடலை நீந்தத் தன் பேரருள்
தந்து அருளினான்
திருநின்ற செம்மை
பிறவா நெறி தந்த பேரருளாளன் .... அறவாழி
அந்தணன் ஆதிப்பராபரன்
பிறவிக் கனைக்கடலை நீந்தினோம் காண்

என்று மாணிக்கவாசகரும் திருமூலரும் காரைக்கால் அம்மையாரும் தங்கள் அனுபவத்தை உரைக்கின்றனர். கடவுளை நேரில் கண்டு வாழ்ந்த தெய்வ ஞானிகளின் திருமுறைகள் தெளிவுபடுத்தும் இவ்வுண்மையையே, அடியவர்களின் அனுபவத்தையே திருக்குறளும்

பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு
அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்.

என்று தெரிவிக்கின்றது. ஆலமர நிழலில் சின் முத்திரையால், மௌனத்தால் வேதம் அருளிச் செய்த தட்சிணாமூர்த்தியின் மெய்த் தவநிலையை, யோகீசுவரனின் யோக நெறியை

பொய்யிலி மெய் எம் நாதனை
வென்றானைப் புலன் ஐந்தும்
ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப்
புணர்க்கையானே
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே
நிலைபேறாய்
பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப்
பொருது உன்னடி

என்று திருவாசகமும் தேவாரமும் போற்றுகின்றன. யோக தட்சிணா மூர்த்தியின் அற்புத அமைதித் தவ வடிவை

பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர்
ஒழுக்க நெறி

என்று திருக்குறள் போற்றுகின்றது. சிறப்புச் செம்பொருளாம் சிவனை, ஆலின் கீழ் அமர்ந்து வேத மருளிச் செய்த தட்சிணாமூர்த்தியின் பொய் தீர்ந்த தவ வடிவை

பொய் கூறா வாய்மையான்
ஆலமர் செல்வன்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதல் கை சேர்ந்த நீர்
மலி கரகம்
எல்லா உயிர்க்கும் ஏமமாகிய நீர் அறவு அறியாக்
கரகத்துத் தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோர்க்கே

என்று பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களும் போற்றுகின்றன.

புல், புதர், மரம் போன்ற தாவர இனம் முதலாக பிரம்மன், விஷ்ணு, பராசக்தி போன்ற தேவ இனம் வரையுள்ள பிறவிகள் எண்பத்து நான்கு லட்சமாகும். ''மாண்டு மாண்டு வந்து வந்து'' எனப் பல் வேறு பிறவிகளிலும் இறந்து இறந்து பிறந்து வரும் நிலையானது தூங்கி விழிப்பதற்கு ஒப்பானது என்பதை

உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி

என்று சுந்தரர் தேவாரம் சொல்லுகின்றது. இறப்பு தூக்கம் போன்றது, பிறப்பு விழித்து எழுவது போன்றது என்பதையே

உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

என்று திருக்குறளும் தெரிவிக்கின்றது. ஆணவ மலம் எனப்படும் நான், எனது என்ற உணர்வே விருப்பு வெறுப்புகளுக்கு, வேண்டுதல் வேண்டாமைக்குக் காரணமாகின்றது. இதுவே பிறப்பிற்கும் மூலகாரண

மாகிக் கர்ம பலன்களைக் கொடுக்கின்றது. விருப்பு வெறுப்புகளை உண்டாக்கும் ஆணவம் முதலிய மலங்களினால் பற்ற முடியாமல் எப்போதும் தூய்மை யாக உள்ளவன் இறைவன். மும் மலங்களாலும் தீண்ட முடியாமல் எப்போதும் தூயவனாக, செம்மை யானவனாக இருப்பதாலேயே சதாசிவன், மாசிலன், அமலன், நிர்மலன், பற்றிலன், வேண்டுதல் வேண்டாமையிலான் என்றெல்லாம் பரமன் போற்றப் பட்டுத் தொழப்படுகின்றான். இத்தகைய தூய நிலையை, பற்றற்ற தன்மையை, வேண்டுதல் வேண்டாமையற்ற, மாசற்ற தனிநிலையை உடைய சதாசிவனைத் தொழுபவர்களுக்குத் துன்பம் இல்லை.

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
மூலமாகிய மும்மலம் அறுக்கும் தூயமேனி
தாயவன் உலகக்குத் தன்னொப்பில்லாத் தூயவன்
அண்ட முதல்வன் அமலன்
வேண்டாமை வேண்டுவதும் இல்லான் தன்னை
ஆதி தன் அடி நினைப்பவர் துன்பம் ஒன்றிலரே

என்று நாத்திக நஞ்சுண்டு பக்தியமுது அளித்த திரு வாசகமும் தமிழ் காத்த தேவாரமும் தெரியப்படுத்து கின்றன. திருமுறைகளைப் போன்றே திருக்குறளும்

பற்றற்றான்
வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

என்று கூறுகின்றது. இருள் எனப்படும் ஆணவ மல மாகிய யான் எனது என்ற உணர்வே இன்ப துன்பம் என்ற கர்ம பலனுக்குக் காரணமாகின்றது. விருப்பு வெறுப்புடன் செய்யப்படும் நல்வினை தீவினை என்ற இருவினைகளால் இன்ப துன்பங்கள் தொடர் கின்றன. பாவம் செய்த போது துன்பத்தையும் புண்ணியம் செய்தபோது இன்பத்தையும் அனுபவிக்க நேரிடுகிறது. யான் எனது என்ற எண்ணத்தை நீக்கி எல்லாம் ஈசன் அருள் என்ற உண்மையை உணர்ந்து பரமனைப் போற்றி வாழ்பவர்களுக்கு இருவினை களான இன்ப துன்பங்கள் பற்றுவதில்லை. இரு வினைகளால் பற்றப்படாத, தீண்டப்படாத பக்குவ நிலையே இருவினையொப்பு எனப்படுகின்றது. பற்றற்ற தூய பரமசிவனைப் போற்றி வாழும் போது ஆணவ இருளால் சேர்கின்ற இருவினைகளா லும் தீண்டப்பெறாத தன்மை உண்டாவதை

விடையான் அடி ஏத்த மேவா வினைதானே
எம்பிரான் கழலடி போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்து எம்மை தீண்டப்பெறா
திருநீலகண்டம்

என்று இன்னிசையால் தமிழ்பரப்பிய தமிழ்க் காவலர் திருஞான சம்பந்தரது தேவாரம் தெரிவிக்கின்றது. மெய்ச்சான்றோர்களின் இந்த அனுபவத்தை, சைவ சித்தாந்த உண்மையை

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

என்று திருக்குறள் கூறுகின்றது. பற்றற்றவனாகிய பரமனைப் பற்றும்போது இருவினையொப்பு நிலை உண்டாகும் என்பதை

பற்றி இப்பாசத்தைப் பற்றற நாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம்
பற்றாங்கவை பற்றீர் பற்றும் பற்றாங்கது பற்றி
என் பற்று அற நான் பற்றி நின்ற மெய்த் தேவர்
சாரும் கதி அது

என்று பாட்டிலே புனிதம் மீட்ட பொய்யடிமை யில்லாத புலவர் மாணிக்க வாசகர் மொழிகின்றார். இத்திருவாசகத்தொடர்களைப் பின்பற்றியே திருக் குறளும்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக
பற்று விடற்கு
சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்று அழித்துச்
சார்தரா சார்தரும் நோய்

என்று வலியுறுத்துகின்றது. இருவினைகளால் பற்றப் படாத பக்குவம் பெற்ற உயிர்களின் முன் பரமேசுவரன் உருவத்துடனோ உருவம் இல்லாமலோ அருவுருவ மாகவோ தோன்றி அருள்புரிகின்றான். சூரியன் முன் இருள் விலகுவது போல் சிவனது திருவருள் முன்பு மலங்கள் விலகுகின்றன. ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் நீங்கிப் பரிசுத்தமான உயிர்கள் முத்தி பெற்று இந்திரன், பிரம்மன், விஷ்ணு போன்ற வானவர்களுக்கு எல்லாம் அப்பாற்பட்ட சிவ லோகத்தைச் சென்று சேர்கின்றன. இதனை

மலனாய தீர்த்து எய்தும் மாதவத்தோர்க்கே
யான் எனது என் உரை மாய்த்துக் கோதில்
அமுதானான்
மால் முதல் வானவர்க்கு அப்பால் செல அன்பர்க்கு
ஆக்கும் சிவன்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும் அப்புறத்து
எமை வைத்திடும் அத்தன்
அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்

என்று தமிழுக்கு வாழ்வளித்த, தமிழ்ப்பாவகை களைப் புனிதமாக்கிய தேவாரமும் மணிவாசகமும் மொழிகின்றன. இந்த அரிய உண்மையைத் திருக் குறளும்

யான் எனது என்னும் செருக்குஅறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

என்று போற்றுகின்றது. முக்தி பெற்று மூவுலகங் களையும் கடந்து தேவர்களுக்கு அப்பாற்பட்டுச் சென்று சிவலோகம் புகும் உயிர்கள் உப்பு, நீரோடு கலந்து நீராவது போல் சிவத்தோடு கலந்து சிவமாவ தால் சிவனைப் போன்று எட்டு குணங்களைப் பெறு கின்றன. இதை

விண்ணவரும் அறியாத விழுப்பொருள்
இப்பொருளாகாதே
எல்லை யிலாதன எண் குணமானவை எய்திடும்
ஆகாதே

என்று திருவாசகம் தெரிவிக்கின்றது. இன்ன தன்மை யடையவன் என்று யாராலும் அறிந்து சொல்ல முடியாத எல்லாம் கடந்த நிலைகொண்ட கடவுள் பரமசிவன் உலகங்களையும் பிறவிகளையும் படைத்து காத்து முக்தியருளி ஐந்தொழில் புரியும் போது எட்டு குணங்களைக் கொண்டுள்ளான். எங்கும் நிறைதல், எல்லையில்லா அருள், எல்லையில்லா இன்பம், எல்லையில்லா ஆற்றல், முழுத்தூய்மை, முற்றறிவு, (எல்லாம் அறிதல்), முற்றுண்ர்வு, முழுத் தன்வயம் (எதற்கும் யாரையும் எந்நிலையிலும் அண்டியிராத நிலை) ஆகிய எட்டு உயர்ந்த இயல்பு களை உடையதால் பரமேசுவரனுக்கு எண் குணத் தான் என்று பெயர்.

இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட ஒணாதே

***மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்***
***(யாவும் கடந்த நிலை)***

1. *எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமை (எங்கும் நிறைதல்)*
2. *எல்லையில் நின் கருணை (எல்லையற்ற அருள்)*
3. *எனையாண்ட அந்தமிலா ஆனந்தம் (எல்லையற்ற இன்பம்)*
4. *கல்நார் உரித்த கனியே, விச்சது இன்றியே விளைவு செய்குவாய், விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும் வைச்சு வாங்குவாய் (எல்லையற்ற வல்லமை)*
5. *தூயமேனிச் சுடர்விடு சோதி (முழுத்தூய்மை)*
6. *மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே.... அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே (முற்றறிவு)*
7. *நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே, உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே (முற்றுணர்வு)*
8. *ஒன்றும் நீ அல்லையன்றி ஒன்றில்லை, ஈசனே நீ அல்லது இல்லை இங்கும் அங்கும் (முழுத்தன் வயம்)*

ஆகிய எட்டு குணங்களைக் கொண்ட ஈசனைத் தலை வணங்க வேண்டும் என்பதை

எட்டு வான் குணத்து ஈசன் எம்மானை
எண்ணமரும் குணத்தார்
தலையே நீ வணங்காய்

என்று தேவாரம் கூறுகின்றது. திருக்குறளும் எண் குணத்தானை வணங்காத தலை தலையே அல்ல என்பதை

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்று கூறுகின்றது. வானோர்க்கு உயர்ந்த சிவலோகம் புகுகின்ற உயிர்கள் சிவத்துடன் கலந்து சிவமாகி எட்டு குணங்களைப் பெறும் நிலையே சிவமாதல், உயிர் அறப்பெறுதல், தத்துவமசி, உயிர் உண்ணுதல், பிரும்ம மாதல் என்றெல்லாம் கூறப்படுகின்றது. உடலோடு உலகில் வாழும்போதே சிவனது திருக்காட்சி பெற்று சிவமாகி எண்குணமானவர்களே ஜீவன் முக்தர்கள் எனப்படுகின்றனர்.

திரிமலம் தீர்ந்து சிவன் அவனாமே
செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து சிவமானவா
இன்பே அருளி எனை உருக்கி உயிர் உண்கின்ற
எம்மானே
நீ ஆதல் உணர்ந்தவா

என்று திருமுறைகள் இவ்வுலகில் வாழும்போதே முக்தி பெற்று சிவமாகும் அனுபவத்தை உரைக் கின்றன. இவ்வாறு சிவமான ஜீவன் முக்தர்களைத் திருக்குறளும்

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி அவர்க்கு
தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்

என்று போற்றுகின்றது. தேவ தேவியர்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டுப் பரம்பொருள் பரமனாக, செம் பொருள் சிவனாகத் தனித்து விளங்கும் பரமேசுவர னுக்கு இணையாக, ஒப்பாக, உவமையாக ஒன்றும்,

ஒருவரும் இல்லை. இத்தகைய ஒப்பில்லாதவனைத் தொழும் போது மனத்துயரம் நீங்கிவிடும்.

ஒப்பு இலாதன உவமனிலிறந்தன ஒண்
மலர்த்திருப்பாதத்து அப்பன்
ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
இணையிலி என்றும் இருந்த கோயில் இராமேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதம் ஏத்தத் துயர் நீங்குமே
சடைமுடியீர் உமைச் சார்பவர் ஆழ்துயர்
அருவினையிலரே


என்று திருவாசகமும் தேவாரமும் போற்றுகின்றன. இணையற்ற ஈசன் கழலை ஏத்தும்போதுதான் மனக் கவலை மறையும். மற்ற எவற்றாலும் துயரம் நீங்காது என்பதைத் திருவள்ளுவரும்

தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது

என்று போற்றுகின்றார்.

கல்வி கற்பதன் பயன் மெய்ப்பொருளை உணர்ந்து அறிவுமயமான பரமனைத் தொழுது பிறவா நெறிக்குச் செல்வதேயாகும். ஒருவர் எத்தனைதான் நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவேசுவரனாகிய தட்சிணாமூர்த்தியை வழிபடவில்லையென்றால், முற்றறிவாளனைத் தொழவில்லை என்றால் அக் கல்வியால் ஒரு பலனும் இல்லை. கற்றும் அறி வில்லாதவரே ஆகின்றனர். இவ்வுண்மையை

ஆதி போற்றி அறிவே போற்றி
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை
ஞானமாம் ஒன்றானானைக் கண்டுகொண்டது
என் உள்ளமே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்
செய்யுள் நிகழ் சொல் தெளிவும் செவ்விய நூல் பல
நோக்கும் மெய்யுணர்வின் பயன் இதுவே
எனத் துணிந்து
விளங்கி ஒளிர் மையணியும் கண்டத்தார்
மலரடிக்கே ஆளானார்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று
வீடுற்றேன்
பெற்றிகொள் பிறைநுதலீர் உமைப் பேணுதல்
கற்றறிவோர்கள் தம் கடனே
கற்றவர் பரவப்படுவானை
வேதம் ஓதிலென் வேள்விகள் செய்கிலென்
நீதி நூல் பல நித்தல் பயிற்றிலென்



ஓதி ஓர் அங்கம் ஆறும் உணரிலென்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே
செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்து இனிது
இருக்கமாட்டா அறிவிலாதவர்

என்று திருமுறைகள் தெரிவிக்கின்றன. இத்திருமுறை களை ஒத்தே திருக்குறளும் கற்றவர்கள் பிறப்பு அறுக்கும் இறைவனை வணங்குவார்கள். இறைவனைத் தொழாவிட்டால் கல்வியால் ஒரு பயனும் இல்லை என்பதை

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி
கற்றதனால் ஆய பயனென் கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்று கூறுகின்றது. தட்சயாகக் கதையும் இக் கருத்தையே வலியுறுத்துகின்றது.

இம்முறையில் திருக்குறளும் திருமுறைகளும் ஒன்றாக விளங்கி ஒரே கருத்தை, ஒரே தத்துவத்தை, ஒரே உண்மையை, ஒரே திருநெறியை, ஒரே அற நெறியை உரைப்பனவாகவே அமைந்து ஒரே தெய்வீகத் தூநெறிக்கு வழிகாட்டுபவையாகவே உள்ளன. திருக்குறளும் திருமுறைகளும் வேறுபாடு இல்லாமல் ஒன்றாக விளங்குவதை

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்

என்று ஔவையார் அருமையாகப் போற்றியுள்ளார்.

★ ★ ★

# திருமலை விநோதங்கள்

- திருமதி இந்திரா ஆரா அமுதன், திருவரங்கம்

திருவேங்கடமுடையாள் வசிப்பது ஸப்தகிரி என்று அழைக்கப்படும் ஏழு மலைகள் கொண்ட சிகரங்கள் மேல் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அந்த ஏழு மலைகளைப் பற்றிய குறிப்புகளையும், திருமலையில் காணவேண்டிய சில அற்புதங்களை யும் பற்றி சற்று கவனிப்போம்.

ஏழு மலைகளாவன. 1. வேங்கடாத்ரி 2. சேஷாத்ரி, 3. வேதாத்ரி, 4. கருடாத்ரி, 5. விருஷபாத்திரி, 6. அஞ்சனாத்ரி, 7. நாராயணாத்ரி அல்லது ஆனந்தாத்ரி எனப்படும்.

ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நாமத்தி னால் இம்மலை அழைக்கப்பட்டு வந்தது.

கிருதயுகத்தில் கருடாத்ரி என்றும்
திரேதாயுகத்தில் விருஷபாத்ரி என்றும்
துவாபர யுகத்தில் அஞ்சனாத்ரி என்றும்
கலியுகத்தில் வேங்கடாத்ரி என்றும் கூறப்பட்டது.

**கருடாத்ரி :** திருமாலின் வாகனமான கருடன் பெருமாளின் அவதாரத்தின் பொருட்டு இந்த மலையை எடுத்து வந்து இவ்விடத்தில் வைத்ததால் கருடாத்ரி என்று அழைக்கப்பட்டது.

**விருஷபாத்ரி :** விருஷபாசுரன் என்ற அரக்க னுக்கு அவன் வேண்டிக் கொண்டதற்கு இணங்க அவன் பெயரால் அந்த மலை அழைக்கப்படும் என்று வரம் அளித்து மோக்ஷமும் கொடுத்தார் திருமால். அத னால் இப்பெயர் வந்தது.

**அஞ்சனாத்ரி :** அநுமனின் தாய் தவம் இருந்து ஆதிவராஹ மூர்த்தியின் அருளால் அநுமனை இத்தலத் தில் பெற்றதால் அஞ்சனாத்ரி என்று எல்லாரும் அழைத்தனர்.

**வேங்கடாத்ரி :** வேம் என்றால் போகும் கடம் என்றால் பாபங்கள், அத்ரி என்றால் மலை. அதனால் பாபங்கள் வெந்து போகும் அல்லது நாசமடையும் மலை என்கிற அர்த்தத்தில் வேங்கடாத்ரி என்ற பெயர் வந்தது.

**சேஷாத்ரி :** எம்பெருமாள் அவதரித்தவுடன் அவனைத் தாங்குவதற்காக ஆதிசேஷன் மலை உரு வில் வந்ததாகவும் கூறுவர்.

**வேதாத்ரி :** ஸ்ரீனிவாசப் பெருமாளை வேதங் கள் மலை உருவில் வழிபடுவதால் வேதகிரி என்றும் அழைக்கப்படுகிறது.

**நாராயணாத்ரி :** ஆதிசேஷனுக்கும் வாயுவுக்கும் ஏற்பட்ட போட்டியில் அவர்கள் இருவரும் சமமான வர்களே என்று பகவான் தீர்ப்புக் கூறியதைக் கேட்டு அவர்கள் ஆனந்தமடைந்ததால் ஆனந்தாத்ரி என்று பெயர் ஏற்பட்டது. ஆக இவ்வாறு 7 வித பெயர் களால் அழைக்கப்பட்டாலும் திருமலையை திருப்பதி என்றும் பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை அழைப்பதை நாம் இன்றைக்கும் காண முடிகிறது. அத்தகைய திருப்பதி ஸ்ரீனிவாசனுக்கு புரட்டாசி மாதத்தில் ப்ரம்மோத்ஸவம் ப்ரும்மாண்டமான வகை யில் நடைபெறுவது வழக்கம். இந்த மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு மாவிளக்குப் போடு வதும், புலால் உண்பவர்கள் கூட இந்த மாதத்தில் புனிதத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மாமிசம் தவிர்த்து விரதம் மேற்கொள்வதையும் நாம் காணலாம்.

திருவேங்கட முடையானின் திருநக்ஷத்திரம் திருவோணமாகும். ஆசார்ய மஹனீயராக ஸ்ரீ வேதாந்த தேசிகர் மணியின் அம்சமாக புரட்டாசி திருவோணத் தில் தூப்புல் என்கிற க்ஷேத்திரத்தில் அவதரித்தார். பல கார்யங்கள், நாடகம் ஸ்தோத்ர பாடங்கள் இயற்றிய மகான் ஆவார்.

இதே புரட்டாசி கேட்டையில் அஹோபில மடத்தை ஸ்தாபித்த முதல் ஜீயரான ஸ்ரீ ஆதிவண் சடகோபன் என்பவர் அவதரித்தார். அவருடைய 20 வயதில் அஹோபில ஸ்ரீநரசிம்மரின் ஆக்ஞைப்படி யதியாக ஆக்கப்பட்டு அவரது வலது கையில் நரசிம்ம விக்ரஹமாக பறந்து வந்து அமர்ந்தார் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி. அந்த விக்ரஹத்தை முறையாக பூஜை செய்து அஹோபில மடத்தை ஸ்தாபித்தபின், இன்றைக்கு 45-வது பட்டத்தில் இருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரும் பூஜை செய்து நித்யபடி பூஜையில் அந்த விக்ரஹத்தை வைத்துதான் ஆராதித்து வருகிறார் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இவ்வாறு இந்த புனித மாதத்தில் அவதரித்த மகான்களைத் தெரிந்து கொண்டதுடன், புரட்டாசி மாதத்தில் ஏராளமான பக்தர்கள் மலையேறி பெருமாளைச் சேவிக்கப் போவார்கள். போகும்போது திருவேங்க முடையான் ஒரு பக்தருடன் சொக்கட்டான் விளையாட்டு விளையாடுவது போன்ற சித்திரத்தைப் பார்க்க நேரிடும். அதன் விவரம் கீழே.

ராஜஸ்தானத்தில் உள்ள ஒரு அடியார் திருப்பதி பெருமாளிடம் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர். அவர் பெயர் ஹாதிராம் பாபா என்பர். ஹாதி என்றால் யானை. அவருடைய உருவம் யானையைப் போல பருமனாக இருந்ததால் அவரை அப்படி அழைத்துவந்தனர். பெருமாளுடன் பக்தியுடன் அளவுகடந்த ஈடுபாடு உடையவர். அவருடன் பெருமாள் வந்து தாயக்கட்டம் ஆடுகிறார் என்றால் அவருடைய பக்தியை அளவிட்டு சொல்ல முடியுமா? இவர்மேல் பொறாமை கொண்ட சிலர் இவரை மட்டம் தட்ட எண்ணி ஒரு அறையில் இவரை வைத்து வண்டி வண்டியாக கரும்பு கட்டு களையும் அடைத்து கதவைப் பூட்டினர். 5 நிமிடம் கழித்த பின் அத்தனை கரும்புகளையும் சாப்பிட்டு விட்டு கதவை உடைத்துக் கொண்டு வெளியே வந்தார். இவருடைய அதிசயத்தை கண்ணால் கண்டபின் மக்கள் எல்லாரும் இவரிடம் மரியாதையுடன் நடந்து கொண்டனர். இவருடைய சமாதியும் திருமலை யிலேயே இருக்கிறது. இவர் கட்டிய மடமும் அங்கே இப்பவும் இருக்கிறது.

அனந்தாழ்வான் என்பவரின் மகிமையைப் பார்ப்போம். ராமானுஜரின் வேண்டுகோளுக்கு இணங்கி திருமலையில் புஷ்ப கைங்கர்யம் செய்ய வந்த சீடர் ஆவார் இவர். திருமலைக்கு செல்ல அந்த காலத்தில் யாரும் லேசில் ஒப்புக் கொள்ளமாட்டார் கள், அங்குள்ள விலங்குகள், குளிர் முதலியவற்றை நினைத்து. இவர் உடனேயே ஒப்புக் கொண்டதால் ''நீர் ஒருவரே ஆண்பிள்ளை'' என்று ராமானுஜரால் ஆலிங் கனம் செய்யப்பட்டவர். அன்று முதல் இவரை அனந்தாண்பிள்ளை என்றே அழைக்கத் தொடங்கி இன்றைக்கும் அவர் வம்சத்தினர் அவ்வாறே அழைக்கப்படுகிறார்கள்.

திருப்பதி சென்று தோட்ட வேலை செய்ய ஆரம்பித்தார். இவருக்கு உதவியாக இவர் மனைவியும் வெட்டித்தருகிற மண்ணை வேறொரு இடத்தில் கொட்டி விட்டு வருவார். அவர் ஒரு நாளைக்கு சீக்கிரத் தில் திரும்பி வந்ததால், இவர் ஆச்சர்யப்பட்டு, ''எப்படி இவ்வளவு சீக்கிரம் வருகிறாய்? வழியில் எங்காவது கொட்டி விட்டு வருகிறாயா'' என்று கேட்டார். அதற்கு அவர், ''நான் வேண்டாமென்று மறுத்தும் ஒரு பிரம்மச்சாரி பையன் என்னிடமிருந்து வாங்கி போய் கொட்டிவருகிறான். அதுதான் சீக்கிரம் வந்துவிடு கிறேன்'' என்றார். தன் வேலையில் யாரும் பங்கு கொள்வதை விரும்பாத அனந்தாழ்வான் அந்தப் பையனை தடுத்துக் கூறியும் அந்த பையன் கேட்கா மல் மண் சுமந்து சென்றான். அவனைப் பிடிக்க எண்ணி இவர் ஓடிவந்தவுடன் அந்த பையன் வேகமாக ஓட ஆரம்பித்தான். இவர் துரத்த அவன் ஓட இவர் பொறுமை இழந்து தன் கையில் உள்ள கடப்பாரை என்ற கொட்டை வீசி எறிந்தார். அது அந்த பையன் முகவாய்க் கட்டையில் பட்டு இரத்தம் கசிய ஆரம் பித்தது. அதைப் பார்த்தும் இவர் விடாமல் துரத்தியதால் அந்த பிரம்மச்சாரி பையன் ஆனந்த விமான நிலயத் துக்குள் நுழைந்தான். இவரும் கர்ப்பக்ரகம் வரை துரத்தி வந்தவர் பெருமாள் முகவாயில் ரத்தப் பெருக் கைக் கண்டதும், வந்தது பெருமாள் என்று உணர்ந்து மன்னிப்புக் கேட்டார். உடனே தோட்டத்திற்கு ஓடி வந்து பூக்களில் உள்ள மகரந்தப் பொடிகளை சேகரித்து அவர் காயத்தில் ஒட்டியவுடன் ரத்தப் பெருக்கு நின்றது. கர்ப்பிணியான அவரது மனைவிக்கு உதவுவதற்காக வும் இவருடைய மேன்மையை உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காகவும் பகவான் நடத்திய ஒரு விளை யாட்டு இது. இன்றைக்கு திருப்பதி கோயில் நுழை வாசலில் உள்ள கதவிற்கு மேலாக மாட்டப்பட் டுள்ளது அந்த ஆயுதம். பெருமாளுக்கு சாத்தப்படும் பச்சைக்கற்பூரமும் இந்த நிகழ்ச்சியை விளக்கும் சான் றாக இன்றைக்கும் சாத்தப்படுவதை நாம் காண்கி றோம். ஆழ்வார் துரத்த பெருமாள் ஓட என்ற நிகழ்ச் சியை நினைவூட்டும் வகையில் புரட்டாசி பிரம்மோத் ஸவத்தின் 10ம் நாள் மாலை அப்ரதக்ஷிணமாக சென்று அங்குள்ள தோட்டத்தின் மகிழ மரத்திற்கு மாலை மரியாதைகளை அருளுகிறார். பின் அனந்தாழ்வார் பரம பதம் பெற்ற தினமான ஆடிப் பூரத்தன்று தோட்டத் திற்கு பிரதக்ஷணமாக சென்று அங்குள்ள ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளி மாலை மரியாதைகளை இன்றும் செய்து வருகிறார்கள்.

ராமானுஜரின் சன்னிதிக்கு ரங்கநாதர் எழுந் தருளுவதுபோலவே, அவருடைய சீடரான அனந்தாழ் வான் மகிழமரமாக மாறி இருக்கும் தோட்டத்திற்கு திருவேங்க முடையான் வருடத்தில் இரண்டு முறை சென்று அருள் பாலிக்கிறார் என்றால் பகவானின் சௌலப்யத்தையும் அடியார்கள் செய்த புண்ணிய தவத் தையும் எவ்வென்று கூறுவது!

இவ்வாறு திருப்பதி பெருமாளின் கருணை யையும் அவரிடம் ஈடுபாடு கொண்ட அடியார்கள் வாழ்க்கையில் அவர் நடத்திய விளையாட்டுகளும் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

# முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் "திருஞான சம்பந்தர்" ஒலிநாடா மதிப்புரை

- அ. நிறைமதி, பி.எல்.

ஒலிநாடா கிடைக்கும்
இடம் : ''செந்தமிழ் வாரிதி''
முனைவர் இரா. செல்வ கணபதி
H 15/2 கரிகாலன் தெரு,
கலாசேத்ரா காலனி,
பெசன்ட் நகர்,
சென்னை - 600 090./

விலை : ரூ. ஐம்பது மட்டும்

''சங்கரன்தாள் தமது சிரங்கொள்
திருத்தொண்டர் புராணத்தை அளவிடநம்
சேக்கிழார்க்கு எளிதுஅலது தேவர்க்கும் அரிதே''

என்று திருத்தொண்டர்களின் பெருமை எலாம் விவரிப்பதற்குச் சேக்கிழாரால் மட்டுமே முடியும் என்று கொற்றவன்குடி உமாபதி சிவம் அவர்கள் போற்றியிருக்கக் காணுகிறோம்.


தெய்வச் சேக்கிழார் பெருமான் மிக விரிவாக 1256 பாக்களில் திருஞானசம்பந்தர் புராணத்தைப் பாடியுள்ளார். மொத்தம் 4286 பாக்கள் கொண்ட பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணமே மிகப் பெரியது. 1256 பாக்கள் கொண்டது. ஆகவே ''பிள்ளை பாதி புராணம் பாதி'' என்று போற்றப்படும் அளவில் பெரிய திருஞானசம்பந்தர் புராணத்தை 90 நிமிட ஒலிநாடாவில் ஒரு செய்தி கூட விட்டுப்போகாமல் விரிப்பதென்றால் அது நம் ''செந்தமிழ் வாரிதி'' முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் ஒருவருக்கே இயலும் என்று அவரைத் தலைமேற் கொண்டு பாராட்டலாம்.

''தமிழர் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு''

என்று போற்றப்படும் தமிழர்ப் பண்பாடுகள் திருஞான சம்பந்தர் வரலாற்றில் பொதிந்து வைத்திருக்கிறார் சேக்கிழார் என்ற முகவுரையுடன் இவ்வொலி நாடாவைத் தொடங்கும் பேராசிரியர் முனைவர் செல்வகணபதி அவர்கள், திருமருகலில் அரவம் தீண்டி மாண்ட வணிகனைத் திருஞானசம்பந்தர் உயிர்ப்பித்தெழச் செய்த அற்புத நிகழ்ச்சியை முதலில் விவரிக்கத் தொடங்கி அவ்வரலாற்றில் அமைந்து விளங்கும் தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்பை விவரிக்கின்றார்.

தம்மிடம் ஒரு மாணவன் ''இன்று இதுபோல் பதிகம் பாடி அரவு கடித்தாரை உயிர்ப்பிக்க முடியுமா?'' என்று வினவியதையும், வணிகனும் அவன் காதலியும் மனத்தால் தீண்டியது அன்றி, கை நகத்தால் கூடத் தீண்டிக் கொண்டாரில்லை என்பதைச் சேக்கிழார் ''வாளரவு தீண்டவும் தான் தீண்டகில்லாள்'' என்ற சொற்றொடரில் தமிழ்ப்பண்பாட்டைப் பதிவுசெய்து உள்ளதைப் போல், இன்றும் அத்தகைய பண்பாடு காத்தவர்களை அரவம் தீண்டு மானால் பதிகம் பாடி ஆண்டவன் அருளால் உயிர்ப்பித்து எழச் செய்யலாம் எனத்தாம் அம்மாணவனுக்கு விடை கூறியதாகவும் பேராசிரியர் செல்வ கணபதி அவர்கள் தந்துள்ள விளக்கம் அனைவரும் ஏற்கக் கூடிய - ரசிக்கக்கூடிய அற்புத விளக்கமாக அமைந்து விளங்குகின்றது.

''பண்பாட்டுச் செல்வர்களைக் கொண்டிருந்த திருநாடு நம் தமிழ்நாடு'' என்பதைப் பூம்பாவையைத் திருஞான சம்பந்தர் உயிர்த்தெழச் செய்த அற்புத நிகழ்ச்சியைக் கொண்டும் அற்புதமாக விவரித்து அதற்குப் பின்பே திருஞானசம்பந்தரின் திருஅவதார விளக்கத்திற்கு வரும் பேராசிரியர் முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் கையாண்டுள்ள உத்திமுறை போற்றுதலுக்கு உரியது. சைவசமயத்தின் உயர்ந்த குறிக்கோள்களில் ஒன்று அன்னம் பாலிப்பு என்பதைத் திருவீழிமிழலை நிகழ்ச்சி கொண்டு அற்புதமாக விவரித்திருக்கும் பேராசிரியர் செல்வ கணபதி அவர்கள் மாணிக்கவாசகர் ''எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க'' என்று ஏன் பாடியிருக்கின்றார் என்பதை மங்கையர்க்கரசியார் வரலாற்றுடன் இணைத்து விளக்கியிருப்பது அருமையிலும் அருமை. இவ்வொலிநாடா சைவ மெய்யன்பர்கள், ஒவ்வொருவர் வீட்டையும் அலங்கரிக்க வேண்டியது அது கடமை. நமக்குப் பெருமை.



சென்னை திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்திற்குச் சமையல் கூடம் திறப்புவிழா 28.10.2002 திங்கட்கிழமை காலை மிகச் சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் அன்னதானக் கூடத்தைத் திறந்து வைத்தார்கள். தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பி.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்களும், சைதைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு இராதாரவி அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருமிகு என். நெடுஞ்செழியன், பி.காம்., எப்.சி.ஏ. ஆடிட்டர் அவர்களால் இவ்வன்னதான சமையல்கூடம் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர் / தக்கார் திருமதி த. காவேரி, பி.ஏ., பி.எல். அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தம் ஜூலை மாதச் சம்பளத்தை சென்னை பெசன்ட் நகர் அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயிலுக்கும், தம் ஆகஸ்ட் மாதச் சம்பளத்தை மாத்தூர் அருள்மிகு மகிஷாசுரமர்த்தினி திருக்கோயிலுக்கும், தம் செப்டம்பர் மாதச் சம்பளத்தை சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயிலுக்கும், தம் அக்டோபர் மாதச் சம்பளத்தைப் பெரம்பலூர் மாவட்டம் கல்லங்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கும் அன்னதானத் திட்டத்துக்காக வழங்கியுள்ளார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.